11.11.15

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## ஆரஞ்சு விவசாயிகள் 'அப்செட்' 'புள்ளி' நோயால் நஷ்டம்

கோத்தகிரி:ஆரஞ்சு பழங்களில், புள்ளி நோய் தாக்குவதால், விவசாயிகள் நஷ்டமடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டத்தில், குன்னூார், கிளிஞ்சடா, துாதுார்மட்டம், கோத்தகிரி அரவேனு, ஜக்கனாரை, கூக்கல், துானேரி உட்பட பகுதிகளின் தேயிலை தோட்டங்களில், ஊடுபயிராக, கமலா ஆரஞ்சு மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. தேயிலை விலை வீழ்ச்சியின் போது, இது கைகொடுத்து வந்தது.காலப்போக்கில், வன விலங்குகள் தொல்லை, 'சிட்ரஸ் வைரஸ்', ஒட்டுண்ணி, சாம்பல் நோய் ஆகியவற்றால், விவசாயம் பாதிக்கப்பட்டது. தற்போது பழங்களில், நோய் தாக்குதல் அதிகரித்து வருவதால், விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

தோட்டக்கலை இணை இயக்குனர் மணி கூறுகையில், “நீலகிரி மாவட்டத்தில், கீழ்கோத்தகிரி, துானேரி, துாதுார்மட்டம் உட்பட பகுதிகளில், ஊடுபயிராக ஆரஞ்சு விவசாயம் உள்ளது. சமீபகாலமாக, ஆரஞ்சு பழங்களில், புள்ளி நோய் தாக்கி வருகிறது; குரங்குகள் தொல்லையும் அதிகரித்துள்ளது. ஆரஞ்சு விவசாயத்தை ஊக்குவிக்க, நாக்பூரில் இருந்து ஒட்டுரக ஆரஞ்சு நாற்றுகளை வரவழைத்து வினியோகிக்க, பயனாளிகளின் பட்டியல் தயாரித்து வருகிறோம்; விரைவில் வினியோகிக்கப்படும்,” என்றார்.

கம்பி வலையில் தயாராகும் வீரிய மிளகு நாற்று



தாண்டிக்குடி:தாண்டிக்குடி அருகே கானல்காட்டில், உயர்தொழில் நுட்ப முறையில் வீரியமான மிளகு நாற்று உற்பத்தியில் விவசாயி ஈடுபட்டுள்ளார்.கானல்காட்டை சேர்ந்த விவசாயி வீர அரசு இயற்கை முறையில் நுண்ணுயிர் அடங்கிய வீரியமான மிளகு நாற்று உற்பத்தி செய்வதில் ஆர்வம் காட்டி வருகிறார்.இதுகுறித்து அவர் கூறியதாவது: கோழிக்கோடு இந்தியன் இன்ஸ்டியூட் ஆப் ஸ்பைசைஸ் ஆராய்ச்சி மையத்தில் பயிற்சி பெற்று இம் முறையை செயல்படுத்தி வருகிறேன்.

எட்டுஅடி உயரமுள்ள வலை கம்பியை தரையில் ஊன்றி அதில் மக்கிய தென்னை நார், மண்புழு உரம் சமஅளவு கலந்து நிரப்ப வேண்டும். தரைப்பகுதியில் ஐந்து மிளகு தாய் கன்றுகளை நடவு செய்து பராமரிக்க வேண்டும்.

இக்கொடி எட்டு அடி உயரம் வளர்ந்த பின் அதிலிருந்து உருவாகும் 'ஆர்த்தோ பெடிக் சூட்' எனும் கிளை உருவாகும். அதை வெட்டி நாற்றங்கால் நடவு பையில் நடவு செய்து வளர்க்கப்படுகிறது.

தாய்ச்செடி தரையில் வேர் ஊன்றியும், கம்பிகளின் நடுவே உள்ள மண்புழு உரம், தென்னை நாரில் எழும் கொடியின் வேர்பகுதி ஊட்டம்

பெற்று இரு மடங்கு வீரியமுள்ள தரமான மிளகு நாற்றுக்கள் கிடைக்க உதவுகிறது. இதுகுறித்த பயிற்சி கோழிகோட்டில் விவசாயிகளுக்கு

வழங்கப்படுகிறது.மலைப்பகுதி விவசாயிகள் பயனடையும் நோக்கில் பன்னியூர்-1, தேவம், மலபார் எக்சல் ரக நாற்றுக்கள் பசுமைக்குடில் மூலம் வலைகம்பியில் வளர்த்து வழங்க முயற்சி எடுத்து வருவதாக கூறினார். மலைப்பகுதி ஆராய்ச்சி நிலையத்தினர் முயற்சிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில்,விவசாயி வீரஅரசின் முயற்சி பாராட்டுக்குரியதே.

## நீலகிரி மாவட்டத்தில் கனமழை:

மஞ்சூர்:'தொடர் மழை எதிரொலி யால், குந்தா, கெத்தை அணைகள் எந்நேரத்தில் திறக்கப்படலாம்' என, அறிவிக்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், மஞ்சூர் சுற்றுவட்டார பகுதியில், மழை தொடர்ந்து பெய்து வருகிறது. நீரோடைகளில் தண்ணீர் வரத்து அதிகரிப்பால், மின் உற்பத்திக்கு பயன்படும் அணைகளில் தண்ணீர் வரத்து படிப்படியாக உயர்ந்து வருகிறது. குந்தா, கெத்தை அணைகளுக்கு, ஒரு வார நிலவரப்படி, வினாடிக்கு, 250 கனஅடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. மின் உற்பத்தியும் முழுத்திறன் அளவுக்கு அதிகரிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இரவு தொடர்ந்து பெய்த கன மழையால், இரு அணைகளுக்கும் வினாடிக்கு, 300 கன அடி தண்ணீர் வருகிறது. அணைகள் முழு கொள்ளவை எட்டும் நிலையில் உள்ளன.

மின் வாரிய அதிகாரி ஒருவர் கூறுகையில், 'முழு கொள்ளளவை எட்டி வரும் நிலையில், உபரி நீரை வெளியேற்றும் வகையில், எந்நேரத்திலும் அணைகளில் தண்ணீர் திறக்கப்படும்' என்றார்.

## ஏழை விவசாயி கண்டுபிடித்த 'கரும்பு விதை பெட்டி'

மதுரை:சிவகங்கை மாவட்டம் ஒக்கூர் அருகே திருமலையை சேர்ந்தவர் அழகுசுந்தரம்,29. சிறு வயதில் பெற்றோர் இறந்தனர். தந்தை

விட்டுச்சென்ற ஐந்து ஏக்கர் வயலில் தன்னால் இயன்றளவு விவசாயம் செய்து தங்கையை கரை சேர்த்தார். பி.ஏ., முடித்து, கோவை வேளாண் கல்லூரியில் இளநிலை பண்ணை தொழில்நுட்பம் பட்டம் பெற்றார். தொழில்நுட்ப கல்வி, மதுரை ஆவினில் சினை ஊசி பயிற்சி என பல சான்றிதழ் படிப்புகளை படித்தார். கரும்பு விவசாயத்தில் இவருக்கு ஆர்வம் அதிகம். **கரும்பின் இரும்பு:**கரும்பு நடவின் போது கரனையுடன் கூடிய கரும்பு துண்டுகள் ஊன்றப்பட்டு வந்தன. முளைத்த கரனைகளை வயலுக்கு எடுத்து செல்லும்போது இடிபாடுகளில் கரனைகளின் முனைகளில் அடிபடும். இதனால் முளைப்புத்திறன் இருக்காது. தற்போதைய தொழில்நுட்பத்தில் கரும்பின் கரனைகளை மட்டும் வெட்டி நிழல் வலைக் கூடாரத்தில் வளர்த்து, நாற்றுக்களை எடுத்துச் சென்று நடவு செய்யப்படுகிறது. இத்தகைய தொழில்நுட்பத்தில் விவசாயிகள் நேரடியாக விதைக்கரனைகளை எடுத்து சென்று, வயலில் நடவு செய்யும்போது ஏற்படும் குறைகள் மற்றும் பொருளாதார நஷ்டம் அதிகம்.

**புது தொழில்நுட்பம்:** விவசாயி அழகுசுந்தரம் தனது பத்தாண்டு கரும்பு விவசாய அனுபவத்தை பயன்படுத்தி, 'கரும்பு விதை பெட்டி' எனும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்தார். இரண்டடி நீளம், ஒன்றரை அடி அகலம் கொண்ட பெட்டியில் ஐந்து அடுக்கு 'ராக்' தயாரித்தார்.

ஒவ்வொரு ராக்கிலும் 150 கரும்பு கரனைகள் என மொத்தம் 750 கரனைகளை அடுக்கி, அவற்றின் மீது தென்னை நார்க்கழிவுகளை பரப்பி ஐந்து நாட்கள் நிழல் பந்தலில் உலர வைக்கிறார். ஆறாவது நாளில் கரும்பு கரனையில் இருந்து விதைகள் நல்ல முறையில் முளைத்து காணப்படுகிறது.

**எடுத்து செல்ல சுலபம்**: பிஸ்கட் போல் அடுக்கப்பட்ட கரனையில், முளைகட்டிய கரும்பு விதைகளுடன் இருக்கும் 'கரும்பு விதை பெட்டி'யை எடுத்து சென்று கரும்பு வயல்களில் ஊன்றலாம். இதற்கான ஆட்களை

வேலைக்கு அமர்த்த தேவையில்லை. அவரவர் சொந்த நிலத்தில் கரும்பு விதை பெட்டி மூலம் கரும்பு விதையை தாமே உற்பத்தி செய்து பயிரிடலாம்.

செலவு பூஜ்ஜியம். இரட்டிப்பு லாபம் கிடைக்கிறது. பூச்சித்தாக்குதலில் இருந்து கரனைகள் தப்ப தென்னை நார் கழிவுடன் வேப்பம் புண்ணாக்கு, சுண்ணாம்பு சிறிதளவு சேர்க்கப்படுகிறது.

**அழகுசுந்தரம் கூறியதாவது:** நான் கண்டுபிடித்த கரும்பு விதை பெட்டியை சக்தி சர்க்கரை ஆலை அங்கீகரித்துள்ளது. ஆலைக்கு கரும்பு சப்ளை செய்யும் விவசாயிகள் எனது தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, கரும்பு விதைகளை ஐந்து நாட்களில் உருவாக்கி பயனடைந்து வருகின்றனர்.

எனது கண்டுபிடிப்பை கோவை வேளாண் பல்கலைக்கு அனுப்பியுள்ளேன். இப்புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி வெளிநாட்டில் இருந்தும் புதிய ரக கரும்பு கரனைகளை விமானம் மூலம் சுலபமாக கொண்டு வரலாம். அடுத்ததாக கரும்பு கரனையின் நடுவில் துளையிட்டு சித்த மருந்துகளை செலுத்தி இயற்கை முறையில் கரும்பை விளைவிக்கும் தொழில்நுட்பத்தை கண்டுபிடித்துள்ளேன். இதற்கு உதவிய திருச்சி காட்டுப்புத்தூர் கே.வி.பாலு, சக்தி சர்க்கரை ஆலைக்கு நன்றி என்றார். தொடர்புக்கு 95858 74197.

## புதுநெல்லு புது நாத்து... நெல் சாகுபடியில் அசத்தும் விவசாயி



ஆரம்ப காலத்தில் ராமநாதபுரம் வறண்ட பூமியில் மிளகி, மோட்டா ரக நெல் மானாவரியாக பயிரிடப்பட்டது. மழை பெய்தால் ஓரளவு விளைச்சல் கை கொடுக்கும். மழை பெய்யா விட்டால் கதிரில் பால் பிடிக்காமல் நெல் சாவியாகி விடும். கால்நடைகளுக்கு தீவனம் கூட தேறாது. நெல் விவசாயம் என்பது ராமநாதபுரம் விவசாயிகளுக்கு எட்டாக்கனியாகவே இருந்து வருகிறது. காலப்போக்கில் நெல்லுக்கு பதில் குண்டு மிளகாய், கத்தரிக்காய் என தோட்டக்கலை சம்பந்தப்பட்ட விவசாயத்தில் விவசாயிகள் கவனம் திரும்பியது. எனினும் ஒட்டுமொத்த வருவாயை, கணக்கிட்டு கருவேல மரங்களை வளர்ப்பு மிகப்பெரிய அளவில் நடக்கிறது. சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தி கருவேல மரங்களை அழிக்கும் நடவடிக்கை துவக்கப்பட்டுள்ளது. ராமநாதபுரம் விவசாயிகள் பலர் மறந்த, கைவிட்ட பழமையான அரிய வகை நெல் ரகங்களை தேடி கண்டுபிடித்து, அவற்றை சோதனை அடிப்படையில், மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே ஏ.புதுப்பட்டியை சேர்ந்த விவசாயி எம்.ஏ.முருகவேல்பாண்டியன் விளைவித்து நெல் விதை ரகங்களை சேகரித்து வருகிறார். ராமநாதபுரம் நெல் ரகத்தை சேர்ந்த "சின்னார்' நெல் விதை, அங்குள்ள விவசாயி ஒருவரிடம் இருப்பதை அறிந்த முருகவேல்பாண்டியன், அவரிடம் விதை நெல்லை விலைக்கு வாங்கி வந்து, தனது வயலில் 50 சென்ட்டில் பயிரிட்டார். சின்னார் நெல்லின் தண்டு வயலெட் நிறத்தில், இலைகள் கருமை நிறம் கலந்து வயலெட் நிறத்தில், பார்க்க வித்தியாசமாக இருக்கும். நெல் அரிசி வெள்ளை நிறத்தில், நீளமாக, தடிமனாக இருக்கும். சீரகச்சம்மா, கர்நாடக பொன்னி போல் சன்னமாக இருக்காது. சின்னார் ரகத்தில் சுவையும், சத்தும் அதிகம். **முருகவேல்பாண்டியன் கூறியதாவது:** ராமநாதபுரத்தில் சின்னார் ரகம் விவசாயி ஒருவரிடம் இருப்பதை அறிந்து, அவரிடம் 20 நாள் வளர்ந்த சின்னார் ரக

நாற்றுகளை கிலோ 70 ரூபாய் கொடுத்து வாங்கினேன். கதிரில் பால் பிடிக்க 90 நாட்கள் பிடிக்கும். பின் 125வது நாளில் அறுவடை செய்யலாம். இந்த அரிய வகையை விதை நெல்லிற்காக பயிரிட்டேன். விரும்பி கேட்கும் விவசாயிகளுக்கு கொடுக்கவுள்ளேன். சர்க்கரை நோயாளிகளுக்கான "காட்டுயாணம்' எனும் நெல் விதை, கேரள பாரம்பரியத்தை சேர்ந்த "கண்டசாலி' நெல் விதை, 60 நாளில் விளையும் மாப்பிள்ளை சம்பா (நுண்ணூட்ட சத்து மிகுந்தது) ரகநெல் விதைகிடைத்துள்ளது. அவற்றை சோதனை அடிப்படையில் விளைவிக்கவுள்ளேன். அழிந்து வரும் அரிய ரக நெல் விதைகளை தேடி கண்டுபிடித்து, அவற்றிற்கு மீண்டும் உயிரூட்டி அழிவில் இருந்து காப்பாற்றுவதே என லட்சியம் என்றார். தொடர்புக்கு 99440 81821

**-கா.சுப்பிரமணியன், மதுரை.**

## வாழையில் பக்கக் கன்றுகளை அறுக்க வேண்டாம்!



வாழை சாகுபடியில் நல்ல மகசூல் பெறும் நோக்கில் அதைச்சுற்றி வளரும் பக்கக்கன்றுகளைஒரு அடி அல்லது 2 அடி வளர விட்டு கத்தியால் சீவி அல்லது வெட்டி அங்கேயே வீசுவது தவறு. துவக்க காலத்தில் கிழங்கு பெருக்கம் ஏற்பட்டு பக்க கன்றுகள் கிளம்பி வரும் போது அதில் ஒரே ஒரு

கன்றை மட்டும் அதுவும் ஈட்டி போன்ற இலைகள் கொண்ட கன்றுகளை மட்டும் ஒரு மரத்துக்கு ஒன்று வீதம் விட்டு விட வேண்டும். கிழங்கில் இருந்தும் முளை கிளம்பும் போதே கடப்பாரையின் பின் பக்கம் மொட்டையாக உள்ள பாகத்தால் குருத்துகளின் மீது அழுத்தி விட்டாலே எளிதில் மடியும். இதற்கு அதிக ஆட்செலவும் வராது. உற்பத்திக்கு உதவும் கிழங்கு, சக்தியை விரயம் செய்யாமல் அடிப்பகுதி பெருத்த தரமான தாய் மரம் உருவாக வழி ஏற்படுகிறது. மேலும் பக்கக் கன்றுகள் நல்லதாகத் தேர்வு செய்து இதர பகுதியில் நட விரும்பினால் ஈட்டி இலை உள்ளதாக ஆங்காங்கே விட்டு வைத்து இரண்டரை அடி வந்ததும் கிழங்கில் இருந்து அடிப்பகுதியை சேதம் செய்யாது துண்டிக்க வேண்டும். வாழைக்கு 3ம் மாதம் 5ம் மாதம் உரமிட வேண்டும் என்று தெரிந்தும் பரிந்துரையை விட அதிகம் இடுதல் தவறாகும். வாழைக்கு அதிக நீர் ஆபத்தானது. மண் கண்டம் ஏற்பட்டு அரை அடி வளமான பகுதியாக உருவாக ஆயிரம் ஆண்டுகள் ஆகும். இதில் உயிர் குலங்கள் வளர்ந்து செறிந்து இருந்தால் தான் அது நல்ல சூழல் உருவாக்கும். எனவே அதனை சிதைக்கும் விதத்தில் களைக்கொல்லி தெளிப்பதும், அதிகநீர் கட்டுதலும் பக்கக்கன்றுகளை அறுத்த தோட்டத்திலேயே வாய்க்காலில் போடுவதும் நஷ்டத்தை ஏற்படுத்தும். நுண்ணீர் பாசன உபகரணம் மூலம் வென்சுரி மூலம் தழை, மணி, சாம்பல் சத்துக்கள் கிடைத்திட திட்டம் இட வேண்டும். களைக்கொல்லி இடாது ஊடுபயிர்கள் பலவற்றை அதாவது பெரிய வெங்காயம், அவரை, பீட்ரூட் மற்றும் ஆமணக்கு, துலுக்க சாமந்தி ஊடுபயிராக வளர்க்கலாம். மேலும் விபரம் பெற 98420 07125 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.

**- டாக்டர் பா.இளங்கோவன் தோட்டக்கலை உதவி இயக்குநர்,உடுமலை, திருப்பூர்.**

சின்ன சின்ன செய்திகள்



**கம்பு சாகுபடி நுட்பங்கள்:** மற்ற தானியங்களை விட புரதசத்து மட்டுமல்லாது அமினோ அமிலங்களையும் அதிகம் பெற்று தர வாய்ந்ததாக விளங்குகிறது. போதிய அளவு மாவுச்சத்தும், அதிக ருசியையும் கொடுக்கக் கூடிய கொழுப்பும், வைட்டமின்களும், தாது உப்புகளும் கம்பு தானியத்தில் நிறைந்துள்ளது. இரும்புச்சத்து மற்ற தானியங்களை விட அதிகம் உள்ளது. கோ (சியு)9, மற்றும் கம்பு வீரிய ஒட்டு (கோ.9) சிறந்த இரகங்களாகும். ஒரு எக்டர் விதைப்புக்கு 5 கிலோ விதை தேவைப்படும். ஒரு கிலோ விதையுடன் மெட்டலாக்ஸில் 6 கிராம் என்ற விகிதத்தில் விதைப்பதற்கு 24 மணி நேரத்திற்கு முன்னதாக விதை நேர்த்தி செய்ய வேண்டும். அத்துடன் அசோஸ்பைரில்லம் கலந்து பின்பு விதைக்க வேண்டும். வரிசைக்கு வரிசை 45 செ.மீ. செடிக்குச் செடி 15 செ.மீ. இடைவெளியில் விதைக்க வேண்டும். மானாவாரியில் தொழுஉரம் 12.5 டன் தழைச்சத்து 40 கிலோ/எக்டர், மணிச்சத்து 20 கிலோ/எக்டர், சாம்பல்சத்து 0 கிலோ என்ற அளவில் அளிக்க வேண்டும். இறவைப்பயிருக்கு தொழுஉரம் 12.5 டன், தழைச்சத்து 80 கிலோ, மணிச்சத்து 40 கிலோ மற்றும் சாம்பல் சத்து 40 கிலோ/எக்டர் என்ற அளவில் இட வேண்டும். 2 முறை களை எடுக்க வேண்டும். 7-10 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாசனம் செய்ய வேண்டும். "குருத்து ஈ' தாக்குதலைக் கட்டுப்படுத்த 5 சத வேப்பங்கொட்டைச்சாறு (அ) ஒரு சதவீதம் நீம்அசால் தெளிக்க வேண்டும். "கதிர் நாவாய்ப்

பூச்சி'யைக் கட்டுப்படுத்த 25 கிலோ மாலத்தியான் 5 சத தூள், 50 சதவீதம் பூவெடுக்கும் சமயத்தில் தூவ வேண்டும். துருநோய் கட்டுப்படுத்த எக்டருக்கு நனையும் கந்தகம் 2.5 கிலோ (அ) மான்கோசெப் 1 கிலோ தெளிக்க வேண்டும். தேவைப்படின் 10 நாட்கள் இடைவெளியில் மற்றொரு முறை தெளிக்க வேண்டும். அடிச்சாம்பல் நோய் கட்டுப்படுத்த எக்டருக்கு 500 கிராம் மெட்டலாக்ஸில் (அ) 1000 கிராம் மான்கோசெப் தெளிக்க வேண்டும். **அறுவடை**: இலைகள் மஞ்சள் நிறமாக மாறி காய்ந்த தோற்றத்தைத் தரும் . தானியங்கள் கடினமாகும். கதிர்களை தனியாக அறுவடை செய்ய வேண்டும். தட்டை ஒருவாரம் கழித்து வெட்டி நன்கு காயவைத்து பின் சேமித்து வைக்கவும். **பனிவரகு கோ (பிவி)5:** இந்த ரகம் மிகக் குறுகிய வயது (70 நாட்கள்), அதிக தூள்கள் (4-10) அதிக கதிர் நீளம் (35 செமீ), அதிக ஊட்டச்சத்து நிறைந்தது. சாகுபடிக்கு ஆடி, புரட்டாசி பட்டம் ஏற்ற பருவமாகும். செம்மண், இருமண் கலந்த நிலங்கள் உகந்தது. கோடை மழையைப் பயன்படுத்தி நிலத்தை சட்டிக் கலப்பையைக் கொண்டு ஆழமாக உழவு செய்ய வேண்டும். விதையளவு - வரிசை விதைப்பு, எக்டருக்கு 10 கிலோ, தூவுவதற்கு எக்டருக்கு 12.5 கிலோ. இடைவெளி - வரிசைக்கு வரிசை 22.5 செமீ, செடிக்குச் செடி 7 செமீ இருக்க வேண்டும். விதைப்பு - கைவிதைப்பு அல்லது விதைப்பான் (அ) கொர்ரு கருவி கொண்டு வரிசை விதைப்பு செய்யலாம். இவ்வாறு செய்வதால் அதிக பரப்பளவில் மண் ஈரம் காயும் முன்பே விதையை விதைக்க முடியும்.

ஒரு எக்டருக்கு தேவையான விதை யளவிற்கு 3 பொட்டலம் (600 கிராம்) அஸோபாஸை அரிசிக் கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும். ஒரு எக்டர் நிலத்தில் அடியுரமாக 12.5 டன் மக்கிய தொழுஉரம் கடைசி உழவின்போது பரப்பி பிறகு நிலத்தை உழவேண்டும். பின்னர் எக்டருக்கு 20 கிலோ தழைச்சத்து, 20 கிலோ மணிச்சத்து ஆகியவற்றை விதைப்பின் போது அடியுரமாக

இடவேண்டும். விதைத்த 15-20 ஆம் நாள் ஒருமுறை களை பறிக்கவும் அவசியம். தேவைப்பட்டால் 40 ஆம் நாள் இரண்டாவது களை எடுக்கலாம். பனிவரகு பயிரை பொதுவாக பூச்சிகளும், நோய்களும் தாக்குவதில்லை. எனவே பயிர்பாதுகாப்பு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

**அறுவடை**: நன்கு காய்ந்து முற்றிய கதிர்களை அறுவடை செய்து, களத்தில் காயவைத்து, அடித்து பின் தானியங்கள் பிரித்து சுத்தம் செய்ய வேண்டும்.

**தினை வெண்பொங்கல்**

தேவையான பொருட்கள் - தினையரிசி - 1 கப், பாசிப்பருப்பு - 1/4கப், இஞ்சி - சிறிய துண்டு, மிளகு - 1/2 தேக்கரண்டி, பெருங்காயம் - சிட்டிகை, உப்பு - தேவைக்கேற்ப, கடுகு- 1/4 தேக்கரண்டி, உளுந்தம் பருப்பு - 1/4 தேக்கரண்டி, நெய் -2 மேசைக் கரண்டி, வறுத்த முந்திரி-10, கறிவேப்பில்லை- சிறிது, எண்ணெய் - 2 மேசைக் கரண்டி. செய்முறை: பாசிப்பருப்பை வெறும் வாணலியில் வாசனை வரும் வரை வறுக்கவும். குக்கரில் சுத்தம் செய்த தினை அரிசி, பாசிப்பருப்பு, உப்பு, தேவையான நீர் சேர்த்து வேக விடவும். பிரஷர் வந்ததும் அடுப்பை சிம்மில் வைத்து, 10 நிமிடம் கழித்து அணைக்கவும். வாணலியில் நெய் சூடாக்கி, முந்திரியை வறுத்து எடுத்துக் கொள்ளவும். பிறகு அதில் எண்ணெய்சேர்த்து, கடுகு, உ.பருப்பு, மிளகு, இஞ்சி, கறிவேப்பிலை, பெருங்காயம் தாளித்து பொங்கலில் சேர்த்துக் கிளறி இறக்கவும். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை-41.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

**மாவட்டத்தில் 32 கண்மாய்கள் நிரம்பியதால் மகிழ்ச்சி! உழவு பணிகளை துவக்கிய விவசாயிகள்...**



மதுரை : தொடர் மழையால், மதுரை மாவட்டத்தில் பொதுப்பணித்துறையின்கீழ் உள்ள 32 கண்மாய்கள் நிரம்பியதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தற்போது பருவமழை துவங்கிவிட்டதால், மாவட்டத்தில் பரவலாக மழை பெய்து வருகிறது. நீர் நிலைகளில் தண்ணீர் நிரம்பி வருவதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கள்ளந்திரி, சிட்டம்பட்டி, புலிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில், முதல்போக சாகுபடி அறுவடை பருவத்தை எட்டியுள்ளது.மேலும், கண்மாய்களில் போதிய தண்ணீர் நிரம்பி வருவதால், உழவு பணிகளில் விவசாயிகள் கவனம் செலுத்தி வருகின்றனர். வறட்சியாக காணப்பட்ட, அலங்காநல்லூர், பாலமேடு, சோழவந்தான் உள்ளிட்ட சுற்றுவட்டார விவசாய நிலங்கள் மழையால் பசுமையாக காணப்படுகின்றன. மழையால் நிரம்பிய கண்மாய்கள்: பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் (பெரியாறு வைகை கோட்டம்) 197 கண்மாய்கள் உள்ளன. சமீபத்திய மழையால் குலமங்கலம், வடுகபட்டி, பூதக்குடி, அதலை, குமாரம், பொதும்பு உள்ளிட்ட 32 கண்மாய்கள்

நிரம்பின. நிரம்பும் நிலையில் 8 கண்மாய்கள், 22 கண்மாய்கள் 50 சதவீதம், 175 கண்மாய்கள் 25 சதவீதம் நிரம்பியுள்ளன.

அதிகாரி ஒருவர் கூறுகையில், "அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. மதுரையை சுற்றியுள்ள பல கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து மழை பெய்வதால், பெரும்பாலான கண்மாய்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது, என்றார். * * * மதுரையை சுற்றியுள்ள பல கண்மாய்கள் நிரம்பி வருகின்றன. விவசாயிகள் உழவு பணிகளில் கவனம் செலுத்தி வருகின்றனர். தொடர்ந்து மழை பெய்வதால், பெரும்பாலான கண்மாய்கள் நிரம்ப வாய்ப்பு உள்ளது. * * *

**வறட்சியில் சிக்கிய பனப்பட்டி மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பொள்ளாச்சி;நெகமம் பகுதியில் எப்போதும் இல்லாத அளவுக்கு, இந்த ஆண்டின் வடகிழக்கு பருவ மழையின் தாக்கம் அதிகரித்துள்ளது. இது, ஒவ்வொரு ஆண்டும் வறட்சியை கண்டு வரும் விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை அளித்துள்ளது.பொள்ளாச்சி, கிணத்துக்கடவு, மதுக்கரை பகுதிகள் தென்மேற்கு பருவமழை பொழிவு பகுதிகள் ஆகும்.இதேபோல வடகிழக்கு பருவமழையும் இப்பகுதியில் ஓரளவு கிடைப்பது வழக்கம்.

ஆனால், இந்த ஆண்டும் யாரும் எதிர்பாராத அளவில் கோவை மாவட்டம் முழுவதும் பலத்த மழை பெய்துள்ளது. குறிப்பாக, மழையே காணாத பனப்பட்டி பகுதியில் தென்னை மற்றும் பந்தல் காய்கறி சாகுபடியாளர்கள் தண்ணீரை விலைக்கு வாங்கி விவசாயம் செய்து வந்தனர்.

ஒரு சிலர் நிலத்தை மட்டுமல்ல; மண்ணை விற்றும் வாழ்க்கை நடத்தினர். பல விவசாயிகள் கல்லுடைக்கும் தொழிலுக்கும் சென்று வந்தனர்.

இச்சூழ்நிலையிலும் ஒரு சில விவசாயிகள் நீரின்றி உயரமான தென்னைகள் முறிந்து விழுவதைக்கண்டு வேறு வழியில்லாமல்

வெட்டியும் விட்டனர். இந்த ஆண்டுதான் இப்பகுதியில் மட்டுமல்ல நெகமம் பகுதியும் பலத்த மழையை கண்டுள்ளன.

அதிலும் நெகமம் பகுதியில் அடுத்தடுத்த நாட்களில் 70, 155 மி.மீ.,மழை பெய்து விவசாயிகளையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது. வாய்க்கால் பாசனத்தை கண்டு வந்த விவசாயிகள் தற்போது, பெய்து வரும் பருவமழையால் திருப்தி அடைந்துள்ளனர்.

இதுபற்றி நெகமம் பகுதி தென்னை சாகுபடியாளர்களிடம் கேட்டபோது, 'பருவமழை எப்போதும் இப்பகுதியில் மிகக்குறைவாகவே பெய்யும். ஆனால், இந்த ஆண்டு விவசாயிகள் எதிர்பாராத ஆளவுக்கு வடகிழக்கு பருவமழை நெகமம் பகுதியில் கருணை காட்டியுள்ளது.

இதனால், தென்னைகளில் காய்ப்பு அதிகரிக்கும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. தென்னை சாகுபடிக்கு மட்டுமன்றி, தக்காளி மற்றும் பொறியல் தட்டை சாகுபடிக்கும், மானாவாரி பயிர்களுக்கும், கால்நடை தீவனத்துக்கும் ஏற்றதாக உள்ளது' என்றனர்.

## அவிநாசியில் மலர்கிறது பூக்கள் சாகுபடி! தண்ணீர் பஞ்சத்தால் புது மார்க்கம்

அவிநாசி: அவிநாசி வட்டாரத்தில், பூக்கள் சாகுபடி பரப்பு கணிசமாக அதிகரித்து வருகிறது. திருப்பூர் மாவட்டம் அவிநாசியில், விவசாயத்துக்கு பெரும்பாலும் ஆழ்துளை கிணற்று தண்ணீரே பயன்படுத்தப்படுகிறது. நிலத்தடி நீர்மட்டம் மிகவும் ஆழமாக உள்ளதால், மஞ்சள், கரும்பு, வாழை மற்றும் காய்கறி பயிர்களை மட்டுமே, பயிரிட்டு வருகின்றனர். ஊடுபயிராக வெங்காயம், தக்காளி, கத்தரி பயிரிடுகின்றனர்.

புதிதாக, மலர் சாகுபடியில் சிலர் ஆர்வம் காட்ட துவங்கியுள்ளனர். ஆலத்துார், தண்டுக்காரன்பாளையம், மங்கரசுவலையபாளையம், குட்டகம் மற்றும் சேவூர் ஊராட்சி கிராமங்களில், சம்பங்கி, சென்டு மல்லி, கோழிக்கொண்டை, செவ்வரளி மலர்களை விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். விசேஷ நாட்களில் இப்பூக்களுக்கு நல்ல கிராக்கி இருக்கிறது.

அவிநாசி தோட்டக்கலைத்துறை உதவி இயக்குனர் ஷெரீனா பேகம் கூறுகையில், "சென்டு மல்லி, 10 ஏக்கர், சம்பங்கி, 30 ஏக்கர், செவ்வரளி, 20 ஏக்கர், கோழிக்கொண்டை, 10 ஏக்கர் உள்ளிட்ட பூக்கள் பயிரிடப்பட்டுள்ளன. விழா நாட்களில் இப்பூக்களுக்கு நல்ல விலை கிடைப்பதால், விவசாயிகள் ஆர்வம் காட்டுகின்றனர். தண்ணீர் வரத்து அதிகம் இருந்தால், பூக்கள் சாகுபடி பரப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளது," என்றார்.

விவசாயி வேலுசாமி கூறுகையில், "பூக்களுக்கு பராமரிப்பும், தண்ணீரும் அதிகமாக தேவையில்லை. சோதனை முயற்சியாக, சென்டு மல்லி பயிரிட்டேன்; பரவாயில்லை. இன்னும் சில ஏக்கரில் பூக்கள் பயிரிட, முடிவு செய்துள்ளேன்," என்றார்.

**மழையால் நொய்யல் ஆற்றில் நீர்வரத்து:நிரம்பி வழிகின்றன தடுப்பணைகள்**



திருப்பூர்:வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளதால், நொய்யல் ஆற்றில் நீர் வரத்து அதிகரித்துள்ளது; இதனால், தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன.

நம் மாவட்டத்தில், வட கிழக்கு பருவ மழை தீவிரமடைந்துள்ளது. நேற்று முன்தினம் காலை முதல், நேற்று காலை வரை, திருப்பூரில், 3.20 மி.மீ., உடுமலை, 2; பல்லடம், 12 மி.மீ., மழை பதிவாகியுள்ளது. மற்ற பகுதிகளில், லேசான மழையே இருந்தது.மேற்குத்தொடர்ச்சி மலைப்பகுதி மற்றும் கோவையில் பெய்த கனமழையால், நொய்யல் ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. திருப்பூர் பகுதியில் உள்ள செம்மாண்டம்பாளையம், ஆண்டிபாளையம் குளங்களுக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது; சாமளாபுரம் குளத்துக்கு தண்ணீர் வரத்து, குறைவாகவே உள்ளது.இக்குளத்தின் உபரி நீரால் நிரம்பும் பள்ளபாளையம் குளமும், தண்ணீரின்றி காணப்படுகிறது. குளத்துக்கு வரும் வாய்க்கால் முழுவதும், ஆகாயத்தாமரை படர்ந்துள்ளதால், நீர் வரத்து தடைபட்டுள்ளது.நீர்வரத்தால், ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஒட்டணை மற்றும் நல்லம்மன் தடுப்பணைகள் நிரம்பி வழிகின்றன. ஆற்றின் இரு கரைகளையும் தொட்டபடி, நீர் செல்கிறது.

நேற்று முன்தினம் இரவு, புத்தூர் மற்றும் அணைப்பாளையம் தரைப்பாலத்துக்கு மேல், வெள்ளம் சென்றது. நேற்று பகலில், நீர் வரத்து குறைந்தது.

விவசாயிகள் கூறுகையில், "வழக்கமாக, நவ., - டிச., மாதங்களில் சாமளாபுரம் குளம் நிரம்பி, பள்ளபாளையம் குளத்துக்கு தண்ணீர் செல்லும். இந்தாண்டு இதுவரை, சாமளாபுரம் குளத்துக்கே தண்ணீர் கிடைக்கவில்லை.இவ்விரு குளங்களையும் நம்பி, 3,000 ஏக்கர் நிலங்களில், இறவைபாசனம் நடைபெறுகிறது. ராஜ வாய்க்காலில், ஆகாயத்தாமரை படர்ந்துள்ளதால், தண்ணீர் வரத்து தடைபட்டுள்ளது.குளத்தின் மொத்த கொள்ளளவில், 40 சதவீதம் கூட, தண்ணீர் இல்லை. மாவட்ட நிர்வாகம் தலையிட்டு, சாமளாபுரம் குளத்துக்கு நீர் வரும் வாய்க்காலை தூர்வாரி சுத்தப்படுத்தி, தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்றனர்.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், "மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளில் பெய்யும் கனமழையால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. கோவை பகுதியில் உள்ள வழியோர கிராமங்களுக்கு, வெள்ள எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.திருப்பூர் பகுதியில் உள்ள குளங்களுக்கு நீர் திருப்பி விடப்பட்டுள்ளது. எனினும், திருப்பூர் பகுதிகளில், வெள்ள பாதிப்பு ஏற்படவில்லை. தொடர்ந்து மழை பெய்தால், ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படக்கூடும்' என்றனர்.

## சேலத்தில் 107 மி.மீ., மழைப்பொழிவு

சேலம்: சேலம் மாவட்டத்தில், கடந்த இரண்டு நாட்களாக தொடர் மழை பெய்து வருகிறது. எப்போதும் இல்லாத அளவில், இடைவிடாமல் மழை பெய்ததால், ஏரி, குளங்கள் அனைத்தும் கிடுகிடுவென உயர்ந்து வருகிறது. சேலத்தில் 107 மி.மீட்டர் மழை பெய்துள்ளது.

தமிழகம் முழுவதும், வட கிழக்கு பருவமழை கடுமையாக பெய்து வருகிறது. குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக, கடலோர மாவட்டங்களில், மழை வெளுத்து வாங்குகிறது. தொடர் மழையால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலான இடங்களில், மழை நீர் ஊருக்குள் வெள்ளம்போல் வந்து கொண்டிருக்கிறது. சேலம் மாவட்டத்தில், இதுவரை காணாத வகையில், துளியளவும் இடைவெளி அல்லாமல் மழை பெய்தபடி உள்ளது. தாழ்வான இடங்களில், மழை நீர் தேங்கி குளம் போல் காட்சியளிக்கிறது. நேற்று முன்தினம், காலை, 10.30 மணிக்கு துவங்கிய மழை, நேற்று இரவு வரையில் நீடித்தது. மாவட்ட அளவில், அதிகபட்சமாக, ஏற்காட்டில், 254 மி.மீ., மழை பொழிந்துள்ளது. குறைந்தபட்சமாக, கெங்கவல்லியில், 55 மி.மீ., மழை பெய்தது. நேற்று காலை 8 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேர மழை அளவு விபரம் வருமாறு: சேலம் - 107 மி.மீ., ஆத்தூர் - 79.4, வாழப்பாடி - 96.0, ஏற்காடு - 254, கெங்கவல்லி - 55.5, தம்மம்பட்டி - 70.2, வீரகனூர் - 69. ஓமலூர் - 133.9, சங்ககிரி - 50.6, இடைப்பாடி - 66.2, மேட்டூர் - 77.4 மி.மீ., சராசரியாக, 96.2 மி.மீ. சேலத்தில், தொடர் மழையால், பெரிய அளவில் பாதிப்பு இல்லை என, கூறப்பட்டாலும், தண்ணீர் செல்வதற்கு வழியில்லாமல் தேங்கி நின்றதால், சாலைகளில் செல்வோர் கடும் சிரமத்துக்குள்ளாகினர்.

## விவசாய மானிய திட்டப்பணி: டிச.,க்குள் முடிக்க உத்தரவு

சேலம்: தமிழகத்தில், விவசாயத்துக்கான மானிய திட்டப்பணிகளை, வரும் டிசம்பர் மாதத்திற்குள் விரைந்து முடிக்க, உத்தரவிடப்பட்டுள்ளது. தமிழக வேளாண் அமைச்சர் வைத்திலிங்கம் தலைமையில், மாதாந்திர ஆய்வுக்கூட்டம் சமீபத்தில், நடந்தது. வேளாண்துறை செயலர் ராஜேஸ் லக்கானி, இயக்குனர் ராஜேந்திரன் முன்னிலையில், அனைத்து மாவட்ட வேளாண் இணை இயக்குனர்கள் கலந்து கொண்டனர். இதில், அதிகரிக்கப்பட்டுள்ள பயிர் சாகுபடி பரப்பளவு குறித்து விவாதிக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து, பயிர் இயக்கம், மற்றும் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தில், செயல்படுத்தப்பட்டு வரும் மானிய திட்டங்களை, வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் நிறைவு செய்ய, அதிகாரிகளுக்கு, உத்தரவிடப்பட்டது.

## குத்தகை விவசாயிகளுக்கு உரம் மானியம் வழங்க கோரிக்கை

கரூர்: தமிழக அரசு வழங்கும் உரம் மற்றும் வாழை பூச்சி மருந்துகள் அனைத்தும், குத்தகை விவசாயிகளுக்கும் வழங்க வேண்டும் என்ற கோரிக்கை எழுந்துள்ளது. கரூர் மாவட்டத்தில் லாலாப்பேட்டை, பிள்ளப்பாளையம், கருப்பத்தூர், புதுப்பட்டி, பிச்சம்பட்டி, மகாதானபுரம், திருக்காம்புலியூர், வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, மரவாபாளையம், நடையனூர், திருக்காடுதுறை, நத்தமேடு, கட்டி பாளையம், தவிட்டுப் பாளையம், புகளூர், பால்துறை, செம்படாபாளையம், தோட்டக் குறிச்சி உட்பட சுற்றுப்புற பகுதிகள் முழுவதும், 10,000க்கு மேற்பட்ட ஏக்கர் பரப்பளவில் வெற்றிலை சாகுபடி செய்யப்படுகிறது. வெற்றிலை சாகுபடியை நம்பி, 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் மற்றும் தினக்கூலி தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். அவுரி, முருங்கை, அகத்திகீரை, வாழைமரம், விதை

மற்றும் கன்றுகள் மூலம் நடவு செய்யப்பட்டு, செடிகள் ஆறு அடி உயரத்துக்கு மேல் வளர்ந்த பின்பு, விட்டம் என குறிப்பிட்ட செடிகளை ஒன்று சேர்த்து கட்டுவர். பிறகு, வெற்றிலை நடவுக்கு முன் பட்டத்தில் இரண்டு முறை பூச்சிக்கொல்லி மருந்துகளும் அதன்பின் போதிய வளர்ச்சிக் கான உரமும் வைக்க வேண்டும். இவற்றை பராமரிக்க அரசு வேளாண்மை துறை மூலம் உரம் மற்றும் பூச்சிக்கொல்லி மருந்து வழங்குவது வழக்கம். ஆனால், இவை முறையாக அனைத்து விவசாயிகளுக்கும் கிடைப்பதில்லை. குறிப்பாக நிலத்தை குத்தகை எடுத்துள்ள விவசாயிகள், அதிக விலை கொடுத்து வெளி மார்க்கெட்டில் உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை வாங்குகின்றனர். எனவே, நிலம் உள்ள விவசாயிகளின் பெயர்களை போல குத்தகை எடுத்துள்ள விவசாயிகளின் பெயரையும் அரசு பட்டியலில் சேர்த்து, உரம் மற்றும் பூச்சி கொல்லி மருந்துகளை மான்ய விலையில் வழங்க வேண்டும்' என குத்தகை விவசாயிகள் தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## மானாவாரி துவரை சாகுபடிக்கு கைகொடுத்தது வடகிழக்கு மழை

கரூர்: கிருஷ்ணராயபுரம் தாலுகாவுக்கு உட்பட்ட பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரை பயிர்களுக்கு போதுமான வடகிழக்கு பருவ மழை பெய்து வருவதால் துவரை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர். கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் யூனியனுக்கு உட்பட்ட பகுதிகளான பஞ்சப்பட்டி, சிவாயம், பிச்சம்பட்டி, கொசூர், வயலூர், புனவாசிப்பட்டி, தாளியம்பட்டி, மத்திப்பட்டி, சேங்கல், முத்துரெங்கம்பட்டி, முளையனூர், விரியபாளையம், போத்துராவுத்தன்பட்டி ஆகிய பகுதிகளில், 1,400க்கும் மேற்பட்ட ஏக்கரில் துவரை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இது, 145 நாள் வரை சாகுபடி செய்யப்பட்டு அறுவடை செய்யப்படுகிறது.

இதுகுறித்து துவரை விவசாயத்தில் ஈடுபடும் ராஜதுரை கூறியதாவது: இந்த பகுதிகளில் மண்வளம் அதிகமாக உள்ளதால் துவரை ரகமான

என்.ஆர்.ஜி., 41 துவரை அதிகளவில் பயிர் செய்ய விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். தற்போது பெய்து வரும் வடகிழக்கு பருவமழை காரணமாக இப்பகுதியில் நிலத்தடி நீர்மட்டம் நன்கு உயர்ந்துள்ளது. துவரை செடி நன்கு வளர்ந்து அதிகமான பூக்கள் பிடித்துள்ளதால் அதிக மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது. பருவமழை கை கொடுத்துள்ளதால் மானாவாரி பயிர்கள் நன்றாக வளர்ந்துள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

தினத்தந்தி



கோவை

கோவையில் தக்காளி விலை திடீரென்று உயர்ந்துள்ளது. இதன்படி கிலோ ரூ.46-க்கு விற்பனையாகிறது.

காய்கறி ரகங்கள் கோவை மாவட்டத்தில் தொண்டாமுத்தூர், ஆலாந்துறை, பேரூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி, மேட்டுப்பாளையம், அன்னூர் உள்ளிட்ட பகுதிகளில் காய்கறி ரகங்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இதேபோல் வெளி மாநிலங்கள் மற்றும் வெளி

மாவட்டங்களில் உற்பத்தியாகும் காய்கறிகள் கோவை மார்க்கெட்டுகளுக்கு கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இந்தநிலையில் கோவையில் தக்காளி விலை திடீரென்று உயர்ந்துள்ளது. இதன்படி கிலோ நாட்டு தக்காளி கிலோ ரூ.36 முதல் ரூ.44 வரையிலும், ஆப்பிள் தக்காளி கிலோ ரூ.36 முதல் ரூ.46 வரையிலும் விற்பனையாகிறது. இதேபோல் மற்ற காய்கறிகளின் விலை விவரம் வருமாறு:- சின்ன வெங்காயம் கத்தரிக்காய் கிலோ ரூ.15 முதல் ரூ.24 வரையிலும், வெண்டைக்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், புடலை கிலோ ரூ.10 முதல் ரூ.20 வரையிலும், அவரைக்காய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், பீர்க்கன்காய் கிலோ ரூ.30 முதல் 40 வரையிலும், சுரைக்காய் கிலோ ரூ.10 முதல் ரூ.20 வரையிலும் விற்பனையானது. பூசணிக்காய் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரையிலும், அரசாணிக்காய் கிலோ ரூ.10 முதல் ரூ.15 வரையிலும், மேரைக்காய் கிலோ ரூ.20-க்கும், பச்சை மிளகாய் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், சின்ன வெங்காயம் கிலோ ரூ.30 முதல் ரூ.50 வரையிலும், பெரிய வெங்காயம் கிலோ ரூ.35 முதல் ரூ.44 வரையிலும் விற்பனை செய்யப்பட்டது.

வியாபாரி தகவல் : இஞ்சி கிலோ ரூ.40 முதல் ரூ.60 வரையிலும், உருளைக்கிழங்கு கிலோ ரூ.20 முதல் ரூ.24 வரையிலும், சேனைக்கிழங்கு கிலோ ரூ.20 முதல் ரூ.24 வரையிலும், முள்ளங்கி கிலோ ரூ.20 முதல் ரூ.24 வரையிலும், கேரட் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையிலும், பீட்ரூட் கிலோ ரூ.40 முதல் ரூ.52 வரையிலும், முட்டை கோஸ் கிலோ ரூ.12 முதல் ரூ.20 வரையிலும், காலிபிளவர் கிலோ ரூ.30 முதல் ரூ.40 வரையிலும், குடை மிளகாய் கிலோ ரூ.20 முதல் ரூ.40 வரையிலும், பஜ்ஜி மிளகாய் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரையிலும் விற்பனையானது.

தக்காளி விலை உயர்வு பற்றி கோவை தியாகி குமரன் மார்க்கெட் சங்க பொருளாளர் கார்த்திகேயன் கூறும்போது, 'கடந்த சில நாட்களாக பெய்து வரும் தொடர் மழை காரணமாக தக்காளி உற்பத்தி கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. மழை நீரில் மூழ்கியதால் உற்பத்தி செய்த தக்காளி அழுகி வீணாகிவிட்டது. இதனால் மார்க்கெட்டுகளுக்கு வரத்து குறைந்து உள்ளது. இதனால் விலை உயர்ந்துள்ளது' என்றார்.

**நெல்விதை நேர்த்தி பற்றி விவசாயிகளுக்கு செயல் விளக்கம்**



வாடிப்பட்டி வேளாண்மை கல்லூரி ஆராய்ச்சி நிலையம் சார்பில் விவசாயிகளுக்கு நெல்விதை நேர்த்தி செயல் விளக்க பயிற்சி முகாமை ஆராய்ச்சி நிலைய மாணவிகள் விளக்கி கூறினர்.

<u>நெல் விதை நேர்த்தி பயிற்சி</u>

மதுரை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைகழகம் வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் 4ஆம் ஆண்டு கிராமபுற வேளாண்மை பணி அனுபவதிட்ட மாணவிகள் சார்பில் விவசாயிகளுக்கு நெல்விதை நேர்த்தி பற்றிய செயல் விளக்க பயிற்சி முகாம் நடந்தது. இந்த முகாமிற்கு விவசாயி சுப்பாராஜ் தலைமை தாங்கினார். வேளாண்மை கல்லூரி மாணவி பாக்கியலெட்சுமி திருந்திய நெல்சாகுபடி பற்றி பேசினார். இதில் 600 கிராம் எடையுள்ள 3பாக்கெட் அசோஸ்பைரில்லமும் 600கிராம்

எடையுள்ள 3பாக்கெட் பாஸ்போபேக்டீரியா ஆகியவற்றை ஒருலிட்டர் அரிசி கஞ்சியுடன் கலந்து 1 எக்டோருக்கு உரிய விதைகளை அதில் போட்டு கலக்கவேண்டும்.

<u>வேகமாக வளரும் பயிர்கள்</u>

பின்பு அரைமணி நேரம் நிழலில் உலர்த்த வேண்டும். இந்த விதைகளை தண்ணீரில் இரவு முழுவதும் ஊரவைத்து காலையில் எடுத்து முளைப்புக்கு வைக்கவேண்டும். பின்பு நாற்றாங்காலில் விதைக்கவேண்டும். இவ்வாறு செய்வதால் பயிர்களுக்க தழை மற்றும் மணிசத்து அதிகரிக்கிறது. மேலும் பூச்சி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் அதிகரிக்கிறது. இதனால்; பயிர்கள் வேகமாக வளர்கிறது. இவ்வாறு பயிற்சி முகாமில் விளக்கி கூறப்பட்டது. இதில் வேளாண்மை கல்லூரி மாணவிகள் கல்பனா, பிரதீபா, மோனிகா, ஷாத்திகா, வைத்தீஸ்வரி உள்பட ஏராளமான விவசாயிகள் கலந்துகொண்டனர்.

**மதுரை மார்க்கெட்டில் மல்லிகைப்பூ கிலோ ரூ.1,000–க்கு விற்பனை பிச்சிப்பூ, முல்லைப்பூவுக்கும் கடும் தட்டுப்பாடு**



மதுரை,

தீபாவளி பண்டிகையையொட்டி மதுரை மாட்டுத்தாவணி பூ மார்க்கெட்டில் நேற்று ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,000–க்கு விற்பனையானது. பிச்சிப்பூ, முல்லைப்பூ போன்றவைக்கும் கடும் தட்டுப்பாடு நிலவியது.

<u>மல்லிகைப்பூ வரத்து குறைவு</u>

தீபாவளி பண்டிகையையொட்டி பூக்களின் விலை கடந்த சில நாட்களாக பல மடங்கு அதிகரித்து விற்கப்படுகின்றன. ஒருபுறம் தொடர் மழை காரணமாக பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் மார்க்கெட்டுக்கு பூக்கள் வரத்து வெகுவாக குறைந்துவிட்டது. இதனாலும், பண்டிகை காலம் என்பதால் தேவைப்பாடு அதிகரித்ததாலும் தான் பூக்களின் விலை கிடுகிடுவென உயர்ந்து உள்ளது.

கடந்த 6–ந்தேதி வரை ஒரு கிலோ மல்லிகைப்பூ அதிகபட்சமாக ரூ.250 வரை விற்கப்பட்டது. ஆனால் 7–ந்தேதி அன்று அதன்விலை திடீரென பலமடங்கு அதிகரித்து, ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.800–க்கு விற்பனையானது. அதே போல கலர் பிச்சி ரூ.400, வெள்ளை பிச்சி ரூ.600, முல்லைப்பூ ரூ.800, கனகாம்பரம் ரூ.700, ஊட்டி ரோஜா (ஒரு கட்டு) ரூ.150 என விலைபோயின.

<u>ஒரு கிலோ ரூ.1000</u>

நேற்றுமுன்தினமும் இதே விலை நிலவரம் தான் நிலவியது. இந்த நிலையில் இன்று தீபாவளி பண்டிகை நாள் என்பதால் நேற்று பூக்களின் விலை மேலும் அதிகரித்தது. அதன்படி, ஒரு கிலோ மல்லிகைப்பூ ரூ.1,000–க்கு விற்கப்பட்டது. அதேபோல பிச்சிப்பூ ரூ.800, முல்லைப்பூ ரூ.800, கனகாம்பரம் ரூ.900, ஊட்டி ரோஜா (20 பூக்கள் கொண்ட கட்டு) ரூ.250 என விலை நிர்ணயம் செய்யப்பட்டன. பூ ரகங்களின் விலை கடுமையாக உயர்ந்து இருந்தபோதும், வாடிக்கையாளர்கள் கூட்டம் நேற்று அதிகாலை முதல் இரவு 8 மணி வரை மாட்டுத்தாவணி பூ

மார்க்கெட்டில் அலைமோதியது. மல்லிகைப்பூவை போல பிச்சிப்பூ, முல்லைப்பூவுக்கும் கடும் தட்டுப்பாடு நிலவியது.

**ஊட்டியில் விளைந்த ராட்சத முள்ளங்கி பொதுமக்கள் வியப்பு**



ஊட்டி

ஊட்டியில் ஒரு விவசாயி தோட்டத்தில் 2 கிலோ எடையுள்ள ராட்சத முள்ளங்கி விளைந்துள்ளது. இதனை பொதுமக்கள் வியப்புடன் பார்வையிட்டு சென்றனர்.

<u>கோடப்பமந்து</u>

ஊட்டி கோடப்பமந்து பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ். இவர் உருளைக்கிழங்கு, கேரட், பீன்ஸ் உள்ளிட்ட காய்கறிகளை பயிரிட்டு வருகிறார். மேலும் தனது நிலத்தில் விளைந்த காய்கறிகளை ஊட்டி உழவர் சந்தையில் விற்பனை செய்து வருகிறார். இந்த நிலையில் நேற்று தனது நிலத்தில் விளைந்த முள்ளங்கியை அறுவடை செய்து, உழவர் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வந்தார். அப்போது அதில் 2 முள்ளங்கிகள் அதிக எடையுடன் ராட்சத அளவில் விளைந்து இருப்பதை கண்டு வியப்படைந்தார். இதனை உழவர்சந்தைக்கு வந்த பொதுமக்களும் கண்டு வியந்து சென்றனர்.

<u>2 கிலோ எடை</u>

இது குறித்து விவசாயி பிரகாஷ் கூறியதாவது:–

ஒரு முள்ளங்கி சாதாரணமாக 250 கிராம் முதல் அதிகபட்சம் 500 கிராம் வரை எடை இருக்கும். ஆனால் தற்போது விளைந்த 2 ராட்சத முள்ளங்கிகளில் ஒன்று 2 கிலோவும் மற்றொன்று 1½ கிலோவும் இருக்கிறது. இதுபோன்ற ராட்சத முள்ளங்கி எப்போதாவது தான் விளையும். இதேபோல் பெரிய அளவிலான பட்டாணியும் தற்போது விளைந்து உள்ளது. சாதாராண பட்டாணியில் 3 அல்லது 4 விதைகள்தான் இருக்கும். ஆனால் இதில் 6 முதல் 8 விரையிலான விதைகள் உள்ளன. இவ்வாறு அவர் கூறினார்.

**தேனி உழவர் சந்தையில் 2 நாட்களில் ரூ.17 லட்சம் வர்த்தகம்**



தேனி

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு தேனி உழவர் சந்தையில் 2 நாட்களில் ரூ.17 லட்சத்திற்கு வர்த்தகம் நடந்துள்ளது.

<u>உழவர் சந்தை</u>

தீபாவளி பண்டிகை இன்று (செவ்வாய்க்கிழமை) கொண்டாடப்பட உள்ளது. இதற்காக கடந்த சில நாட்களாக காய்கறி விற்பனை அதிகரித்து உள்ளது. அதற்கு ஏற்ப காய்கறிகளின் விலையும் அதிகரித்து உள்ளது. தேனியில் உள்ள உழவர் சந்தையில் தினமும் சராசரி 30 டன்

காய்கறிகள் விற்பனைக்கு கொண்டு வரப்படும். கடந்த 2 நாட்களாக வரத்தும், விற்பனையும் அதிகரித்து உள்ளது. நேற்று முன்தினம் தேனி உழவர் சந்தைக்கு சுமார் 33½ டன் காய்கறிகள் மற்றும் பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. 88 விவசாயிகள் பொருட்களை கொண்டு வந்தனர். 65 வகையான காய்கறி, பழங்கள் விற்பனைக்கு வந்தன. சுமார் 4 ஆயிரத்து 800 பொதுமக்கள் வந்து பொருட்கள் வாங்கிச் சென்றனர். இதன் மூலம் சுமார் 8 லட்சத்து 84 ஆயிரம் வர்த்தகம் நடந்தது.

ரூ.17 லட்சம் வர்த்தகம்

அதேபோன்று நேற்றும் அதிகாலையிலேயே உழவர் சந்தைக்கு மக்கள் வரத்தொடங்கினர். 73 விவசாயிகள் சுமார் 34 டன் காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். 58 வகையான காய்கறி, பழங்கள் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டன. 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் வந்து பொருட்கள் வாங்கிச் சென்றனர். இதன் மூலம் 8 லட்சத்து 43 ஆயிரம் வர்த்தகம் நடந்தது. கடந்த 2 நாட்களில் தேனி உழவர் சந்தையில் 17 லட்சத்திற்கும் மேல் வர்த்தகம் நடந்துள்ளது. அதேபோன்று உழவர்சந்தைக்கு வெளியிலும் 50–க்கும் மேற்பட்ட விவசாயிகள் பொருட்களை வைத்து விற்பனை செய்தனர். இன்று (புதன்கிழமை) வழக்கம் போல் உழவர் சந்தை செயல்படும்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் தொடர் மழை எதிரொலி: முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு**



தேனி,

முல்லைப்பெரியாறு அணை பகுதியில் பெய்து வரும் தொடர் மழையால் அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருகிறது. இதையடுத்து அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்தனர்.

முல்லைப்பெரியாறு அணை

தேனி, திண்டுக்கல், மதுரை, சிவகங்கை, ராமநாதபுரம் ஆகிய 5 மாவட்டங்களின் நீராதாரமான முல்லைப்பெரியாறு அணை தமிழக–கேரள மாநில எல்லையில் அமைந்து உள்ளது. இந்த அணையில் சுப்ரீம் கோர்ட்டு உத்தரவுப்படி அமைக்கப்பட்ட மூவர் கண்காணிப்பு குழுவினரும், துணை கண்காணிப்பு குழுவினரும் அவ்வப்போது ஆய்வு செய்து வருகின்றனர்.மூவர் கண்காணிப்பு குழுவின் உத்தரவுப்படி துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பித்து வருகின்றனர். துணை கண்காணிப்பு குழுவினர் கடைசியாக கடந்த மாதம் 7–ந்தேதி ஆய்வு செய்தனர். இந்த நிலையில் 10 நாட்களாக அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்து வருகிறது.

இந்த தொடர் மழை காரணமாக அணையின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. இதையடுத்து முல்லைப்பெரியாறு அணையில் துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு மூவர் கண்காணிப்பு குழு தலைவர் எல்.ஏ.வி.நாதன் உத்தரவிட்டார்.

துணை கண்காணிப்பு குழுவினர் ஆய்வு

அதன்பேரில் துணை கண்காணிப்பு குழுவினர் முல்லைப் பெரியாறு அணையில் ஆய்வு மேற்கொண்டனர். துணை கண்காணிப்பு குழு தலைவரான மத்திய நீர்வள ஆணையத்தின் செயற்பொறியாளர் அம்பர்ஜி ஹாரீஷ்கிரீஷ் தலைமையில் இந்த ஆய்வு நடத்தப்பட்டது. இதில் தமிழக அரசின் பிரதிநிதிகளான முல்லைப்பெரியாறு அணை செயற்பொறியாளர் மாதவன், உதவி கோட்ட பொறியாளர் சவுந்தரம், கேரள அரசின் பிரதிநிதிகளான கேரள பெரியாறு நீர்ப்பாசனத்துறை செயற்பொறியாளர் ஜார்ஜ் டேனியேல், உதவி பொறியாளர் பிரசீத் ஆகியோர் பங்கேற்றனர். இந்த ஆய்வுக்காக துணை கண்காணிப்பு குழு

தலைவர் மற்றும் கேரள மாநில பிரதிநிதிகள் வல்லக்கடவு வழியாக ஜீப்பில் அணைக்கு சென்றனர். தமிழக பிரதிநிதிகள் காலை 10 மணியளவில் தேக்கடியில் இருந்து படகு மூலம் அணைக்கு புறப்பட்டுச் சென்றனர்.

<u>கசிவுநீர் சேகரிப்பு</u>

அணையின் நீர்மட்டம் 127 அடியாக இருந்தது. துணை குழுவினர் முல்லைப்பெரியாறு அணை, அணையின் கேலரி பகுதி, மதகு பகுதிகளுக்கு சென்று ஆய்வு செய்தனர். அப்போது கேலரி பகுதியில் 5 இடங்களில் கசிவுநீர் மாதிரிகளை சேகரித்தனர். பேபி அணையையும் பார்வையிட்டனர்.

ஆய்வை முடித்துக் கொண்டு பிற்பகல் 2 மணியளவில் தேக்கடிக்கு திரும்பி வந்தனர். பின்னர் குமுளி 1–ம் மைல் பகுதியில் உள்ள கண்காணிப்பு குழுவின் அலுவலகத்தில் ஆய்வுக்கூட்டம் நடத்தப்பட்டது.

ஆய்வுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் விவரம் வருமாறு:–

<u>மூவர் குழுவுக்கு அழைப்பு</u>

துணை கண்காணிப்பு குழு ஆய்வின்போது முல்லைப் பெரியாறு அணையில் 5 இடங்களில் கசிவுநீர் மாதிரி எடுக்கப்பட்டுள்ளது. அந்த கசிவுநீர் கோவையில் உள்ள ஆய்வுக்கூடத்திற்கு அனுப்பி ஆய்வு செய்வது, அதில் சிமெண்டு தன்மை வெளியேறி உள்ளதா? அப்படி வெளியேறி இருந்தால் எந்த அளவுக்கு வெளியேறி உள்ளது? என்பதை கண்டறிவது, அணையின் நீர்மட்டம் 130 அடியை எட்டினாலோ அல்லது வருகிற 20–ந்தேதிக்குள்ளோ மூவர் கண்காணிப்பு குழுவை அணையில் ஆய்வு செய்ய அழைப்பு விடுப்பது, அணையின் 13 மதகுகள் அமைந்துள்ள பகுதிகளில் வளர்ந்துள்ள செடி, கொடிகளை அகற்றும் பணியை தொடங்குவது என முடிவுகள் எடுக்கப்பட்டன.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்


**விவசாயிகளுக்கு மண் வள அட்டைகள் விநியோகம்**

திருவாடானை தாலுகா ஆர். எஸ். மங்கலம் அருகே சோழந்தூர் கிராமத்தில் விவசாயிகளுக்கு வயல் விழா முகாமில் மண் அட்டைகள் வழங்கப்பட்டன.

வட்டார வேளாண்மைத் தொழில் நுட்ப இயக்க முகமை மாநில விரிவாக்க திட்டங்களுக்குகான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின் கீழ் வயல் விழா முகாம் நடைபெற்றது. இதில் சோழந்தூர் ஊராட்சி மன்ற தலைவர் ஜயினாலாவுதீன் தலைமை வகித்தார். வேளாண்மை அலுவலர் உலகுசுந்தரம் வரவேற்றுப் பேசினார். வேளாண்மை உதவி இயக்குனர் மோகன்ராஜ், மண்வள அட்டை இயக்கம் மற்றும் உர சிபாரிசு பற்றி எடுத்துரைத்தார். வேளாண்மை நடமாடும் மண் பரிசோதனை நிலைய அலுவலர் முருகேஸ்வரி, மண் பரிசோதனை, மண் மாதிரி எடுத்தல் மற்றும் மண்வள அட்டை பற்றி விளக்கம் அளித்தார்.

முகாமில், விவசாயிகளுக்கு மண்வள அட்டை, உர சிபாரிசு மற்றும் மண் மாதிரி எடுத்தல் செயல் விளக்கம் செய்து காட்டபட்டது. மண் மாதிரி மற்றும் உர சிபாரிசு பற்றிய பிரசுரங்கள் வழங்கபட்டன. பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர் முருகானந்தாம் மற்றும் ராம்குமார் செய்தனர்.

**வேலூர் அருகே காற்றழுத்த தாழ்வுநிலை; வடமாவட்டங்களில் மழை தொடரும்: ரமணன்**




தென் மேற்கு வங்கக் கடலில் உருவான ஆழ்ந்த காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், வழுவிழந்த நிலையில் வேலூர் அருகே நிலை கொண்டுள்ளது. இதனால் தமிழகத்தின் வடமாவட்டங்களில் ஒரு சில இடங்களில் கனமழை பெய்யக்கூடும் என்றார் சென்னை வானிலை மைய இயக்குநர் ரமணன்.

வங்கக்கடலில் உருவான தீவிர காற்றழுத்தத் தாழ்வு மண்டலம் திங்கள்கிழமை (நவ. 9) இரவு புதுச்சேரி அருகே கரையை கடந்தது. இது தாழ்வு மண்டலமே, புயல் இல்லை என குறிப்பிட்ட ரமணன், தாழ்வுமண்டலம் சில மணி நேரம் கடல்பகுதியிலேயே நிலைத்து நின்றதால் வட கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்துள்ளது. அதிகபட்சமாக நெய்வேலியில் 48 செ.மீ. மழை பதிவாகியுள்ளது.

இன்று காலை 8.30 மணி நிலவரப்படி, ஆழ்ந்த காற்றத்தழுத்த தாழ்வுமண்டலம் வலுவிழந்த நிலையில் வேலுரின் தெற்கு தென்கிழக்கே 80 கி.மீ தொலைவில் நிலை கொண்டுள்ளது. இதனால் வடமாவட்டங்களில் பெரும்பாலான இடங்களில் இன்றும் கனமழை தொடரும். மலையோர பகுதிகளில் அதிக கனமழை பெய்யும். தெற்கு மாவட்டங்களில் சில இடங்களிலும் மழை பெய்யலாம்.

சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை பெய்யலாம் என்றார் ரமணன்.

## கடலூரில் கொட்டித் தீர்த்த மழை: 16 பேர் சாவு



தென் மேற்கு வங்கக் கடலில் உருவான தீவிர காற்றழுத்தத் தாழ்வு மண்டலம், திங்கள்கிழமை இரவு 7.30 மணியளவில் கரையை கடந்த நிலையில் கடலூர் மாவட்டத்தில் கடந்த இரண்டு நாள்களாக மழை கொட்டித் தீர்த்தது. இந்த மழை வெள்ளத்துக்கு இதுவரை 16 பேர் உயிரிழந்துள்ளதாக மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தேசீய பேரிடர் மீட்பு படையின் மூன்று குழுக்கள் மழை, வெள்ளச் சேதங்களை சீரமைப்பதற்காக மாவட்டம் முழுவதும் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வங்கக் கடலில் மையம் கொண்டிருந்த காற்றழுத்த தாழ்வு மண்டலம், திங்கள்கிழமை (நவ. 9) இரவு 7.30 மணியளவில் புதுச்சேரி அருகே கரையை கடந்தது. இதனால் கடலூர் மாவட்டத்தில் மழை கொட்டித் தீர்த்தது. கடலூரில் மட்டும் 39 செ.மீ. மழை பதிவாகியுள்ளது. இன்று (நவ. 10) அதிகாலையிலும் மாவட்டத்தின் அநேக இடங்களில் பலத்த

மழை பெய்தது. இந்த மழையால் மாவட்டத்தில் உள்ள 28 கிராமங்களை வெள்ள நீர் சூழ்ந்துள்ளது. மேலும், 400 குடிசைகள் சேதமடைந்துள்ளன. சுமார் ஒரு லட்சம் பேர் தாழ்வான இடங்களிலிருந்து அற்புறப்படுத்தப்பட்டுள்ளனர். பண்ரூட்டி அருகே பெரியகாட்டுப்பாளையில் பகுதியில் 10 பேர் இறந்ததாக தெரிகிறது. மாவட்டத்தில் இதுவரை மழை வெள்ளத்தில் சிக்கி 16 பேர் பலியாகியுள்ளது மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. சிலர் வெள்ளத்தில் இழுத்துச் செல்லப்பட்டுள்ளனர். இதனால் சாவு எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என தெரிகிறது.

இந்த மழையால் கிழக்கு கடற்குகரைச் சாலை முழுவதும் வெள்ளநீர் சுழ்ந்துள்ளது. தொடர் மழை காரணமாக அநேக இடங்களில் மின்கம்பங்கள் முறிந்தன. மின்மாற்றிகளும் (டிரான்ஸ்பார்மர்) சேதமடைந்துள்ளன. பல மரங்கள் வேரோடு சாய்ந்து விழுந்தன.

இந்த மழையால் கெடிலம் ஆற்றில் வெள்ளநீர் கரைபுரண்டு ஓடுகிறது. ஆற்றையொட்டி வசிக்கும் மக்களில் பலர் வெள்ளத்தில் சிக்கியுள்ளனர். அவர்களை பாதுகாப்பாக வெளியேற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்த தொடர்மழை கடலூர் மாவட்ட மக்களின் அன்றாட வாழ்கையை அதிகமாக பாதித்துள்ளது. நாடு முழுவதும் தீபாவளி பண்டிகை கோலகலமாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில், கடலூரில் அதற்கான அறிகுறியே இல்லை.

அநேக இடங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளதால் மக்களின் அன்றாட அலுவல்கள் ஏதும் மேற்கொள்ள இயலாமல் தவித்து வருகின்றனர். பல இடங்களில் குடிநீர் கிடைக்கவில்லை.

கடந்த 2011 ஆம் ஆண்டு தானே புயலால் கடலூர் மாவட்டம் வெகுவாக பாதிக்கப்பட்ட நிலையில், தற்போது பெய்த மழை மீண்டும் ஒரு சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தினகரன்

**கொட்டி தீர்த்த மழையால் மேட்டூர் அணைக்கு தண்ணீர் வரத்து அதிகரிப்பு : நீர் மட்டம் 77 அடியை தாண்டியது**



சேலம் : நீர் பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்து வருவதால் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் உயர்ந்துள்ளது. சேலம் மாவட்டம் மேட்டூர் சுற்றுவட்டார பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதே போன்று மேட்டூர் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளிலும் நல்ல மழை பெய்கிறது. ஓமலூரில் கொட்டி வரும் மழையால் டானியல் பேட்டை பகுதியில் வெள்ளம் சூழ்ந்துள்ளது. இதனால் சரம்பாக நதியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. கரும்பு, வாழை தோட்டங்களில் வெள்ளம் புகுந்துள்ளது. இந்நிலையில் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது. இதனால் அணையின் நீர் மட்டம் 77.71 அடியாக

அதிகரித்துள்ளது. அணைக்கு வினாடிக்கு 10,951 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது . காவிரி டெல்டா மாவட்டங்களில் கன மழை பெய்து வருவதால் அணைகளில் இருந்து 500 கன அடி நீர் மட்டுமே திறந்துவிடப்பட்டுள்ளது. நீர் இருப்பு 39.71 டி.எம்.சி-யாக உள்ளது.

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வாழை இலை வரத்து குறைந்தது: விற்பனை மந்தம்**

பொள்ளாச்சி, : பொள்ளாச்சி காந்தி மார்க்கெட்டுக்கு நேற்று வாழை இலை வரத்து வழக்கத்தைவிட குறைவாக இருந்தது. பண்டிகை காலமாக இருந்த போதும் விற்பனை மந்தமாக இருந்தது. பொள்ளாச்சி மார்க்கெட்டுகளுக்கு தினசரி கொண்டுவரப்படும் காய்கறிகளை உள்ளூர் மற்றும் வெளியூர் வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். இதில் வாரத்தில் வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் வாழை இலை ஏலம் நடைபெறுகிறது. சுற்றுவட்டார கிராமங்கள் மட்டுமின்றி பழனி, ஒட்டன்சத்திரம், தென்காசி, தூத்துக்குடி பகுதிகளில் இருந்து விவசாயிகள் இலைக்கட்டுகள் கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். கடந்த தென்மேற்கு பருவமழையை எதிர்நோக்கி பல கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்ட வாழைகள், கடந்த மாதத்தில் பெரும்பாலும் அறுவடை செய்யப்பட்டிருந்தன. இதனால் அந்நேரத்தில் மார்க்கெட்டுக்கு வாழை இலைக்கட்டு வரத்து அதிகமாக காணப்பட்டது. மேலும் அப்போது சுபமுகூர்த்த நாட்கள் உள்ளிட்ட விஷேச நாட்கள் இருந்ததால் ஒருக்கட்டு ரூ.600 முதல் ரூ.800வரை விற்பனையானது. இந்நிலையில் சுற்றுவட்டார பல கிராமங்களில், வடகிழக்கு பருவமழையை எதிர்நோக்கி புதிதாக வாழை நடவு செய்யப்பட்டுள்ளது. இதனால் தற்போது வாழை அறுவடை குறைந்தது. இதன் காரணமாக மார்க்கெட்டுக்கு கொண்டுவரப்படும் வாழை இலைக்கட்டுகளின் எண்ணிக்கை இந்த மாதம் துவக்கத்திலிருந்து குறைவாக காணப்பட்டது. நேற்றைய சந்தைக்கு சுமார் 250க்கும் குறைவான வாழை இலைக்கட்டுகளே வந்தது.

வரத்து குறைவாக இருந்தாலும், தீபாவளியையொட்டி வெளியூர் வியாபாரிகள் வருகை குறைவால் குறைந்த விலைக்கு போனது. இதில் 100 எண்ணம் கொண்ட ஒருக்கட்டு இலை ரூ.300 முதல் ரூ.500வரை மட்டுமே விலை போனதாகவும், அடுத்து கார்த்திகை மாதத்திலிருந்து வாழை இலைக்கட்டு கூடுதல் விலைக்கு போகும் என்ற நம்பிக்கை உள்ளது என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

**கோவை கூட்டுறவு அங்காடிகளில் 11,650 கிலோ துவரம் பருப்பு விற்பனை**

கோவை, : தமிழகத்தில் துவரம்பருப்பு விலையேற்றத்தை கட்டுப்படுத்தும் வகையில் சென்னை, கோவை, திருச்சி உள்ளிட்ட பெருநகரங்களில் உள்ள கூட்டுறவு பண்டக சாலைகளின் மூலம் குறைந்த விலையில் துவரம்பருப்பு கடந்த 1ம் தேதி முதல் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. கோவை மாவட்டத்தில் மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலையின் கீழ் இயங்கும் 10 விற்பனை அங்காடிகளிலும் குறைந்த விலையில் பருப்பு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு நபருக்கு ஒரு கிலோ மட்டுமே வழங்கப்படும். இதில் பொது மக்களின் வசதிக்கு ஏற்ப ஒரு கிலோ மற்றும் அரைகிலோ பாக்கெட்டுகளில் விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ ரூ.110க்கும், அரை கிலோ ரூ.55க்கும் விற்கப்படுகிறது. இதில் தற்போது வரை 11,650 கிலோ பருப்பு விற்பனை செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்ய தேவையான அளவு இருப்பு அங்காடிகளில் வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**முதல்போக சாகுபடிக்கு மஞ்சளாறு அணை திறப்பு**

தேவதானப்பட்டி, : தேவதானப்பட்டி அருகே உள்ள மஞ்சளாறு அணை நேற்று முதல்போக சாகுபடிக்கு திறந்து விடப்பட்டது. மேற்கு

தொடர்ச்சிமலை, கொடைக்கானல் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது மஞ்சளாறு அணை. இதன் மொத்த உயரம் 57 அடியாகும். அணையின் மொத்த கொள்ளவு 487.35 மி.கன அடி. மொத்த பாசன பரப்பு, 5259 ஏக்கரும், இதில் பழைய ஆயக்கட்டு பாசனம் 3386 ஏக்கரும், புதிய ஆயக்கட்டு பாசனம் 1873 ஏக்கரும் ஆகும். தேனி மாவட்ட பாசன பரப்பு, 3148 ஏக்கரும், திண்டுக்கல் மாவட்டத்தில் 2111 ஏக்கரும் ஆகும். முதல் போக சாகுபடிக்காக, பழைய ஆயக்கட்டு பாசனத்திற்கு வினாடிக்கு 200 கன அடி வீதமும், புதிய ஆயக்கட்டு பாசனத்திற்கு வினாடிக்கு 40 கன அடி தண்ணீரும் நேற்று முதல் திறந்து விடப்பட்டது. மாவட்ட கலெக்டர் வெங்கடாச்சலாம் பாசனத்திற்காக அணையை திறந்து விட்டார். டிஆர்ஓ பொன்னம்மாள், பெரியகுளம் கோட்டாட்சியர் ஜானகி, தாசில்தார் ரமேஷ், ஆர்ஐ சரவணன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் சேகர், உதவி செயற்பொறியாளர் செல்வம், உதவிப் பொறியாளர்கள் சென்றாம், கண்ணன், சேகரன், எம்எல்ஏ லாசர் மற்றும் பெரியகுளம் யூனியன் சேர்மன் செல்லமுத்து, அதிமுக மாவட்டச் செயலாளர் சிவக்குமார், தேவதானப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க தலைவர் சுரேஷ், கெங்குவார்பட்டி கூட்டுறவு சங்க தலைவர் காட்டுராஜா, விஏஓ கற்பகவள்ளி மற்றும் விவசாய சங்க பிரநிதிகள் கலந்து கொண்டனர். தேவதானப்பட்டி மஞ்சளாறு அணை முதல்போக சாகுபடிக்கு திறந்து விடப்படுகிறது.

**பயிர்களில் பூச்சி தாக்குதல் பாதுகாப்பு வழி முறைகள் அதிகாரிகள் விளக்கம்**

தேவதானப்பட்டி, : பெரியகுளம் வட்டாரத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பயிர்களுக்கு பாதுகாப்பு வழிமுறைகளை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பெரியகுளம் வட்டாரத்தில் கரும்பு, பருத்தி, எள், மக்காச்சோளம், உளுந்து, தட்டைப்பயறு, அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

தற்போது பெய்து வரும் மழை, பருவநிலை மாற்றம் ஆகிய காரங்களால் பூச்சி நோய் தாக்க வாய்ப்புள்ளது. பொருளாதார சேதநிலை அறிந்து விவசாயிகள் மருந்து தெளிக்க வேண்டும். பருத்தியில் அசுவினி, தத்துப்பூச்சி, இலைப்பேன், செவ்வண்டு, வெள்ளை ஈ, ஆகிய பூச்சிகள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. சாறு உறிஞ்சும் பூச்சிகளின் தாக்குதல் பொருளாதார சேதநிலையை தாண்டும்போது ஏக்கருக்கு 200 மில்லி டைமீத்தியேட் என்ற மருந்தை தெளித்து கட்டுப்படுத்தலாம். உளுந்து, பாசிப்பயறு, தட்டைப்பயறு ஆகிய பயறு வகைகளை அசுவினி, தத்துப்பூச்சி ஆகிய பூச்சிகள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. இந்த பூச்சிகளைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 400 மில்லி மோனோகுரோட்டாபாஸ் தெளிக்கலாம். கரும்பில் இலைப்புள்ளி நோய் தாக்குதலுக்கு ஏக்கருக்கு 200 கிராம் கார்பஷ்டசிம் என்ற மருந்து தெளிக்கலாம். எள் பயிரில் காய்த்துளைப்பான் தாக்குதலுக்கு 300 மில்லி குனைல்பாஸ் தெளிக்க வேண்டும். மக்காச்சோளத்தில் குருத்துப்பூச்சி தாக்குதலுக்கு 400 மில்லி மோனோகுரோட்டாபாஸ் தெளிக்கவேண்டும். இவ்வாறு பெரியகுளம் வேளாண்மை உதவி இயக்குனர் தெரிவித்துள்ளார்.

**விவசாயிகளுக்கான விழிப்புணர்வு முகாம்**

வருசநாடு, : கடமலைக்குண்டு கிராமத்தில் விவசாயிகளுக்கான கூட்டு பொறுப்புக்குழு தொடர்பான விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. கடமலைக்குண்டு லா தொண்டு நிறுவனம் மற்றும் நபார்டு வங்கி இணைந்து நடத்திய இந்த முகாமிற்கு நபார்டு வங்கி உதவி மேலாளர் வெங்கட்ராமன், கனரா வங்கி பயிற்சி மையத்தின் முதல்வர் தீனதயாளன், கடமலைக்குண்டு கூட்டுறவு சங்க செயலர் இளங்கோவன், லா தொண்டு நிறுவன செயலாளர் வெங்கடேசன், கனரா வங்கி துணை மேலாளர் கோகுல் ஆகியோர் இந்த முகாமில் கலந்துகொண்டனர். முகாமில் விவசாயிகளை ஒருங்கிணைத்து 4 மற்றும் 6 குழுக்களாக

பிரித்து சுயதொழில் தொடங்குதல் மற்றும் மானியம் மற்றும் வங்கிக்கடன் பெற்று தருதல் குறித்து விரிவாக பேசப்பட்டது. முகாமில் லா தொண்டு நிறுவன திலகவதி, ரமேஷ் ஆகியோர் நன்றி கூறினர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பவானிசாகர் அணை நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்வு**

ஈரோடு, : பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் ஒரே நாளில் 2 அடி உயர்ந்தது. பவானிசாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் கடந்த மாதம் வரையிலும் கடும் வறட்சி நிலவி வந்ததால் அணையின் நீர்மட்டம் வேகமாக சரிவடைந்து வந்தது. கடந்த வாரம் 58 அடியாக சரிவடைந்த நிலையில் ஒரு வாரமாக ஈரோடு மாவட்டம் முழுவதும் பரவலாக மழை பெய்து வருகிறது. இதன் காரணமாக அணையில் இருந்து தண்ணீர் திறப்பு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது. தண்ணீர் நிறுத்தப்பட்டதாலும், நீர்பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் கனமழையின் காரணமாக பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 61 அடியாக இருந்த நிலையி–்ல் நேற்று தொடர்ந்து நீர்வரத்து அதிகரித்து காணப்பட்டதால் அணையின் நீர்மட்டம் ஒரேநாளில் 2 அடி உயர்ந்து 63.17 அடியாக இருந்தது. அணைக்கு 6760 கனஅடி வீதம் நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து பாசனத்துக்கும், குடிநீர் தேவைக்காக ஆற்றின் வழியாகவும், கீழ்பவானி வாய்க்கால் வழியாகவும் தண்ணீர் நிறுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அணைக்கு பவானி ஆற்றின் வழியாகவும், மோயாறு பள்ளத்தாக்கு வழியாக வரும் நீர்வரத்து முழுவதும் அணையில் முழுமையாக தேக்கி வைக்கப்படுகிறது. அணையின் நீர்மட்டம் வேகமாக உயர்ந்து வருவதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**நெல்வயலில் அசோலாவை பயன்படுத்தி அதிக மகசூல் பெறலாம் விவசாயிகளுக்கு அதிகாரி யோசனை**

அரியலூர், : நெல் வயலில் அசோலாவை பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம் என வேளாண் அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்துஅரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: அசோலா என்பது தண்ணீரில் மிதக்ககூடிய பெரணி வகையைச் சேர்ந்த தாவரம். தமிழில் இதன் பெயர் மூக்குத்தி மற்றும் கம்மல் செடி என அழைக்கப்படுகிறது. இது நெற்பயிருக்கு ஒரு சிறந்த இயற்கை உரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது, மேலும் கால்நடை மற்றும் கோழித் தீவனமாகவும் பயன்படுகிறது. நெல் வயலில் இரண்டாம் களை எடுக்கும்போது அசோலாவை வயலில் வைத்து மிதித்து விட்டால், கூடுதல் மகசூல் கிடைக்கும். அசோலாவை மண்ணில் கலந்து மக்கும் பொழுது சிறந்த உரமாக பயன்படும். மற்ற தாவரங்கள் அனைத்திற்கும் உரமாக பயன்படுத்தலாம். நெல் விளைச்சலில் இயற்கை உரமாக செயல்பட்டு மண்ணின் தரத்தை மேம்படுத்துகிறது. நெல்வயல்களில் இந்த அசோலாவை தூவிவிடுவதன் மூலம் 10 நாட்களில் வயல் முழுவதும் பரவி வளர்ந்துவிடும். நாற்று நடவு செய்த 7ம் நாள் வயலில் அசோலாவை 5 கிலோ தூவ வேண்டும். இதற்கு அளவு கிடையாது. பயிர்களுக்கு இடைவெளியில் கிடைக்கும் காற்று, சூரிய ஒளியை பயன்படுத்திக் கொண்டு அசோலா வேகமாக வளரும். நிலத்தில் பச்சைப் போர்வை போர்த்தியது போல, நிலம் முழுவதும் அசோலா படர்ந்து விடும். 20ம் நாளில் இருந்து ஒரு ஏக்கரில் தினமும் 50 முதல் 100 கிலோ வரை அசோலாவை அறுவடை செய்யலாம். நிலம் முழுவதும் படர்ந்து விடுவதால், களை கட்டுப்படுகிறது. சாதாரணமாக 15 தூர்கள் வெடிக்கும் நிலத்தில், 40 தூர்கள் வரை வெடிக்கும். இதன் காரணமாக வழக்கமான மகசூலைவிட 10% முதல் 20% கூடுதல் மகசூல் கிடைக்கும்.இதேபோல்

மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுத்தால், அதிகபட்சம் 2 லிட்டர் வரை கூடுதல் பால் கிடைக்கும். 25% அளவுக்கு தீவனச்செலவு குறையும். கோழிகளுக்குக் கொடுத்தால் அதிக முட்டையிடும். மீன்களுக்குப் போட்டால் விரைவாக வளரும். புரதச்சத்து மிகுந்த இந்தப் பாசியில் வடை, போண்டா செய்து நாமும் சாப்பிடலாம். ஆகையால், ஒவ்வொரு விவசாயியும் கட்டாயம் அசோலா வளர்த்தால், வீட்டில் உள்ளவர்களோடு சேர்ந்து பயிர்கள், கால்நடைகள் என அனைத்தும் ஆரோக்கியமாக இருக்கும். மிகச்சிறிய இலைகளையும், துல்லியமான வேர்களை கொண்டது. மேலும் இதன் தண்டு மற்றும் வேர்ப்பகுதி நீரில் மூழ்கி இருக்கும். இந்த வகை தாவரம் அதிவேக வளர்ச்சி கொண்டவை. பெரணி தாவரமான அசோலாவின் வளர்ச்சிக்கு மிதமான வெப்பநிலையான 35-36 டிகிரி செல்சியஸ் வெப்பம் தேவைப்படுகிறது. அசோலாவில் தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல்சத்து என முக்கியமான சத்துக்கள் ஒருங்கே அடங்கிய அதிசய தாவரமாக விளங்குகிறது. மேலும் தாது உப்புக்கள் 10% முதல் 15% வரையும் (கால்சியம், பாஸ்பரஸ், பொட்டாசியம், மெக்னீசியம்), வைட்டமின்கள் மற்றும் பீட்டாகரோடின் மற்றும் பல நுண்ணூட்டச் சத்துக்களும் இதில் உள்ளன. இப்படி பல்வேறு சிறப்புகள் வாய்ந்த அசோலாவின் பயன்பாடுகளை விவசாயிகள் பயன்படுத்தி கொள்ள வேண்டும் என்றார்.

உரச்செலவு 30% குறைவு

அசோலாவை நெல் வயலில் வளர்க்கும் போது, நீர் ஆவியாவது குறைகிறது. அசோலா, காற்றிலுள்ள நைட்ரஜனை மண்ணில் பிடித்து வைக்கும் வேலையைச் செய்வதால், ரசாயன முறையில் விவசாயம் செய்பவர்களுக்கு 30 சதவிகிதத்துக்கும் மேல் உரச் செலவு குறைகிறது.

33 விவசாயிக்கு கடனுதவி வழங்கல்

வேதாரண்யம், : வேதாரண்யம் மருதூர் கூட்டுறவு சங்கம் மூலம் 33 விவசாயிகள் மற்றும் 15 மகளிர் குழு உறுப்பினர்களுக்கு எம்எல்ஏ காமராஜ் கடனுதவி வழங்கினார். நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுகா மருதூர் வடக்கு கூட்டுறவு கடன் சங்கத்தில் விவசாயிகளுக்கு கடன் வழங்கும் விழா சங்கத்தலைவர் பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. சங்க செயலாளர் காரியப்பன் வரவேற்றார். எம்எல்ஏ காமராஜ் கலந்து கொண்டு, 33 விவசாயிகளுக்கு ரூ.9 லட்சத்து 40 ஆயிரம், 15 மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.12.80 லட்சம் கடனுதவி வழங்கினார். இயக்குநர்கள் விசுவலிங்கம், காசிநாதன், கணேசன், அமுதா, ரங்கநாதன், செல்வி, கருணாநிதி, ராஜேஸ்வரி, அமுதா கூட்டுறவு சங்க பணியாளர்கள் இளங்கோவன், முருகானந்தம், பூங்குழலி, சங்க உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். அனுசுயா நன்றி கூறினார்.

**பசுந்தீவன உற்பத்தி இலவச பயிற்சி**

மதுரை,:திருப்பரங்குன்றம் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் கால்நடை வளர்ப்பு குறித்த இலவச பயிற்சிகள் நடக்கிறது. நவ.12,13 ஆகிய இரு தேதிகளிலும் பசுந்தீவன உற்பத்தி குறித்த பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது. கால்நடை விவசாயிகள், சுயதொழில் துவங்க விருப்பமுள்ளவர்கள், இளைஞர்கள், மகளிர்கள் இப்பயிற்சியில் கலந்துகொள்ளலாம். ஆர்வமுள்ளவர்கள் தங்களது பெயர் மற்றும் முகவரியை பதிவு செய்துகொள்ளலாம். தொடர்புகொள்ள வேண்டிய தொலைபேசி எண்: 0452-2483903.

**மலேரியாவை குணப்படுத்தும் கானா வாழை**



தொண்டை வலியை சரிசெய்வதில் கானா வாழை முக்கியபங்கு வகிக்கிறது. இது பொன்னுக்கு வீங்கிக்கு மருந்தாகவும் பயன்படுவதோடு மட்டுமல்லாமல் குஷ்டத்தை நீக்க கூடிய தன்மையும் பெற்றது. மேலும் மலேரியா மற்றும் டைப்பாய்டு காய்ச்சலை குணப்படுத்தவும் கட்டிகளை கரைக்கவும் கானா வாழை மருந்தாக பயன்படுகிறது. கானா வாழைக்கு கன்று குட்டி புல் என்ற பெயர் உண்டு. கன்று குட்டிகளுக்கு பால் மறப்பதற்காக இதை கொடுப்பார்கள். இதன் இலைகள் முட்டை வடிவில் இருக்கும். பூக்கள் ஊதா கலரில் காணப்படும். கானா வாழை தண்டு அதிகளவு நீர்சத்து நிறைந்தது. நீர்நிலைகள் பக்கத்தில் வளரும் செடி இது. ஒரு கிளையை நட்டு வைத்தால் ஒரு மாதத்தில் வளர்ந்து விடும் தன்மை கொண்டது. கானா வாழை பல்வேறு மருத்துவ குணங்களை கொண்டது. குஷ்டத்தை நீக்க கூடியது. தீராத பல்வேறு நோய்களை போக்க கூடியது. இது உடலுக்கு தீங்கு விளைவிக்காது. கானா வாழையை பயன்படுத்தி பொன்னுக்கு வீங்கிக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு பிடி அளவு கானா வாழை இலைகளுடன், கால் ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்க்கவும். பின்னர், நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தேன் சேர்த்து குடித்தால், பொன்னுக்கு வீங்கி குணமாகும். தொண்டை வலி மற்றும் வீக்கம் சரியாகும். வாழையை போன்ற தன்மை கொண்ட கானா வாழையானது, காய்ச்சலை போக்கும் தன்மை கொண்டது. சீதள

நோய்களை சீர்செய்ய கூடியது. கானா வாழை குரல்வளையில் ஏற்படும் நோய்களை குணமாக்கும். தொண்டை சதை அழற்சியை சரிசெய்யும். சளியை போக்கும் மருந்தாகிறது. கானா வாழையை பயன்படுத்தி மலேரியா காய்ச்சலை குணமாக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒரு பிடி அளவு கானா வாழை இலைகள், சிறிது மிளகு பொடி, அரை ஸ்பூன் சீரகம் எடுத்துக்கொள்ளவும். நீர் சேர்த்து கொதிக்க வைத்து வடிகட்டி குடித்தால் மலேரியா, டைபாய்டு காய்ச்சல் குணமாகும். மண்ணீரல் வீக்கம் சரியாகும். ஒரு வேளைக்கு 30 கிராம் அளவுக்கு கானா வாழை இலை எடுத்துக் கொள்ளலாம். கானா வாழை இலையை பயன்படுத்தி நெறிக்கட்டு, வீக்கத்துக்கான மருந்து தயாரிக்கலாம். கானா வாழை இலை பசையை அரை ஸ்பூன் விளக்கெண்ணையுடன் லேசாக சூடுபடுத்தி எடுத்துக் கொள்ளவும். சிறுதுண்டு வாழை இலையை லேசாக சூடுபடுத்தி எடுக்கவும். பின்னர், வதக்கி வைத்த இலை பசையை வாலை இலைக்குள் வைத்து வீக்கம், கட்டி இருக்கும் இடத்தில் வைத்து கட்டவும். இவ்வாறு செய்தால் நெறிக்கட்டு, வீக்கம் சரியாகும். மார்பக கட்டி, அக்குளில் ஏற்படும் நெறிக்கட்டு போன்றவற்றை கானா வாழை சரிசெய்யும் குணம் கொண்டது. பல்வேறு நன்மைகளை கொண்ட கானா வாழையை பாசி பருப்புடன் சேர்த்து கூட்டு செய்து சாப்பிடலாம். இது உடலுக்கு நன்மையை கொடுக்கும்

மூலிகை மந்திரம் லவங்கப்பட்டை



சமையலில் வாசனைக்காகவும், சுவைக்காகவும் நாம் சேர்க்கும் லவங்கப்பட்டைக்கு பல்வேறு மருத்துவ குணங்களும் உள்ளன. லவங்கப்பட்டை நம் நாட்டில் பல இடங்களில் விளையக்கூடியதுதான். எனினும் திருநெல்வேலி மாவட்டம், கேரளா போன்ற இடங்களிலும் இலங்கையிலும் அதிகம் விளைகிறது. சீனத்திலும் இது வெகுவாகப் பயிராகிறது.

லவங்கப்பட்டை மரம் 30 அடி உயரம் வரையில் வளரக்கூடியது. இதனுடைய பட்டை கனமுள்ளதாகவும், நீளமாகவும், வாசனையுடையதாகவும், பட்டையின் உள்ளே நார் மிகுதியாகவும் இருக்கும். 'கருவாப்பட்டை' என்றும் அழைக்கப்படும் லவங்கப்பட்டை வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, அதிசாரபேதி, வாந்தி, சீதபேதி, ரத்தப்போக்கு ஆகியவற்றை குணமாக்கும் திறன் கொண்டது. பிரசவ வலி குறைபாடு, மாதவிலக்கு பிரச்னைகள், நாள்பட்ட இடுப்புவலிகளை குணப்படுத்த லவங்கப்பட்டை பயன்படுகிறது. மேலும் வயிற்றுவலி, பல் வலி, நாக்கு வாதம் முதலியவற்றையும் குணப்படுத்தும் வல்லமையும் இதற்கு உண்டு. இனிப்புச் சுவை பெற்றது லவங்கப்பட்டை என்பதால் கசப்பான மருந்துகளுடன் சேர்த்துக் கொடுப்பது மருத்துவர்களின்

வழக்கம். காய்ச்சலால் அவதிப்படுவோர்க்கு சுறுசுறுப்பைத் தரும் பொருட்டு லவங்கப்பட்டை சூரணத்தை அனுபானமாகக் கொண்டு மற்ற மருந்துகளைச் சேர்த்துக் கொடுப்பதும் உண்டு. சன்ன லவங்கப்பட்டை, பெரிய லவங்கப்பட்டை, காட்டுக் கருவாப்பட்டை என சில வகைகள் இதில் உள்ளன. கருவாப்பட்டையை வாலையில் இட்டு வடித்து எண்ணெய் எடுப்பது உண்டு. எண்ணெயும் கருவாப்பட்டை போலவே வாசனையும் ருசியும் பெற்றிருக்கும். இந்த கருவாப்பட்டை எண்ணெய் பல் வலி, மூட்டு வலி, தலைவலிக்கு மேற்பூச்சு மருந்தாக உதவும். லவங்கப்பட்டையின் தாவரப்பெயர் Cinnamomum zeylanicum என்பதாகும். இதை ஆங்கிலத்தில் Cinnamon என்று குறிப்பிடுவது உண்டு. ஆயுர்வேதத்தில் 'தாருச்சினி', 'வராங்கா', 'உட்கடா' போன்ற பெயர்களால் குறிப்பர். 'தார்சினி' என்பது இதன் அரபுப் பெயர் ஆகும். 'தாதுநட்டம் பேதி சருவவிஷயம் ஆகிய நோய் பூதகிர கஞ்சிலந்திப் பூச்சிவிடஞ் - சாதிவிடம்ஆட்டுமினாப் போடிருமல் ஆகியநோய்க் கூட்டமற ஓட்டுமில வங்கத் துரி...'என்று அகத்தியர் தனது பாடலில் லவங்கப்பட்டை பற்றி குறிப்பிட்டிருக்கிறார். அதாவது, தாது நட்டம், விந்துக் குறைபாடுகள், வயிற்றுப்போக்கு, விஷக்கடிகள், ஆஸ்துமா, இருமல், வயிற்றுக் கடுப்பு ஆகியன ஒழிந்து போகும் என்பது மேற்கண்ட பாடலின் பொருள் ஆகும். லவங்கப்பட்டை பாக்டீரியா நுண்கிருமிகளை அழிக்கும் வல்லமை பெற்றது, ரத்தம் உறையாத பிரச்னையைத் தீர்க்கக் கூடியது, புண்களை ஆற்றக்கூடியது, செரிமானத்தைத் தூண்டக்கூடியது, பூஞ்சைக் காளான்களைப் போக்கக்கூடியது, அமில எரிவை அடக்கக்கூடியது, வாந்தியை நிறுத்தக்கூடியது, விஷக்காய்ச்சலைப் போக்கக்கூடியது. மேற்பூச்சாகப் பயன்படுத்த பல் வலி, நரம்பு பிரச்னைகள், மூட்டுவலிகள் ஆகியவற்றையும் குணமாக்க வல்லது.

125 கிராம் லவங்கப்பட்டையில் பின்வரும் சத்துகள் அடங்கியுள்ளன. மாவுச்சத்து 101 கிராம், புரதச்சத்து 5 கிராம், நீர்ச்சத்து 13.3 கிராம், சாம்பல் 4.5 கிராம், பைட்டோ ஸ்டிரால் 32 மி.கி., நார்ச்சத்து 66 கி, சர்க்கரை சத்து 2.7 கிராம் மற்றும் கொழுப்பு 1.5 கிராம், ஒமேகா-3 கொழுப்பு அமிலம் 14 மி.கி., ஒமேகா 6 கொழுப்பு அமிலம் 55 மி.கி., வைட்டமின் ஏ, சி, ஈ, கே போன்றவை அடங்கியுள்ளன. இதனுடன் தாது உப்புகளான சுண்ணாம்பு 1.3 கிராம், இரும்பு 10 மி.கி., மெக்னீசியம் 75 மி.கி., பாஸ்பரஸ் 80 மி.கி., சோடியம் 12 மி.கி., துத்தநாகம் 2.3 மை.கி., செம்பு 423 மை.கி., மாங்கனீஸ் 22 மி.கி., செலினியம் 3.9 மை.கி. ஆகியனவும் அடங்கியுள்ளன.

லவங்கம் ஒரு சக்தி வாய்ந்த நுண் கிருமி நாசினி. லவங்கப்பட்டையினின்று எடுக்கப்படும் எண்ணெயில் 40 முதல் 50% வரை ‘சின்னமால் டீ ஹைட்’ எனும் வேதிப்பொருள் நிறைந்திருப்பதே இதற்குக் காரணமாகும். லவங்கப்பட்டை வயிற்றுக்கோளாறை சரி செய்யவல்லது. அடிக்கடி மலம் கழிக்க வேண்டும் என்ற உணர்வு மட்டுமின்றி வயிற்றை அடைத்தது போல் இருக்கும் உணர்வையும் லவங்கப்பட்டை சீர் செய்ய வல்லது.

உணவுப் பாதையில் ஏற்பட்ட புண்களை ஆற்றி செரிமானத்தையும் சீர் செய்கிறது. புற்றுநோய்க் கட்டிகள் உள்பட பல்வேறு கட்டிகளையும் குணமாக்கும் திறன் கொண்டது லவங்கப்பட்டை. நவீன ஆய்வுகள் லவங்கப்பட்டை ரத்தப் புற்றுநோயையும் ‘லிம்ப்போமா’ என்னும் புற்றுநோயையும் கூட குணப்படுத்தவல்லது என்பதை உறுதிப்படுத்தியுள்ளது. லவங்கப்பட்டையில் ‘மாங்கனீஸ்’ என்னும் தாது உப்பு அதிக அளவு இருப்பதால் மூட்டு வலியைக் குணப்படுத்துகிறது. மாங்கனீஸ் எலும்புகளை பலப்படுத்தக்கூடியது. மேலும் ரத்தத்தையும்

இணைப்புத் திசுக்களையும் பலப்படுத்தவல்லது.

எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு மாங்கனீஸ் இன்றியமையாததாக விளங்குகிறது. எலும்புகளின் பலவீனத் தினை தடுக்கும் உன்னத சக்தியை லவங்கப்பட்டை பெற்றுள்ளது.லவங்கப்பட்டை பொடியை நீரில் ஊற வைத்து சிறிது நேரம் கழித்து தெளிந்த நீரைக் கொண்டு சமையல் அறை மேடை, தொட்டி, குளிர்சாதனப்பெட்டி, கதவின் கைப்பிடி போன்ற பல்வேறு பொருட்களைக் கழுவுவதால் அவற்றின் மேற்படிந்திருக்கும் கிருமிகள் துடைத்து அழிக்கப்பட்டு தூய்மை பெறுகின்றன. ரசாயன திரவங்களைக் கொண்டு கையைச் சுத்தப்படுத்துவதால் சிலருக்கு கைகளில் புண்கள் ஏற்படும் அபாயம் உள்ளது. அவர்கள் லவங்கப்பட்டை நீரால் கழுவுவது மிகவும் பாதுகாப்பானது ஆகும்.

லவங்கப்பட்டை சோர்வைப் போக்கக்கூடிய ஆன்டி ஆக்சிடன்ட்டாகவும் விளங்குகிறது. இதிலுள்ள சத்து தன்னிச்சையாக செயல்பட்டு புற்றுநோயை உண்டாக்கும் கிருமிகளை சேர ஒட்டாமல் தவிர்க்கின்றது. லவங்கப்பட்டை ரத்தத்தை நீர்மைப்படுத்தும் தன்மையையும் பெற்றிருக்கிறது. இதனால் ரத்த ஓட்டம் தடையின்றி இயங்க வகை செய்கிறது. மாரடைப்புக்குக் காரணமாகத் திகழும் ரத்தம் உறைந்து ஏற்படும் அடைப்புக்கு வழி இல்லாத வகையில் ரத்த ஓட்டத்தைத் துரிதப்படுத்துகிறது. லவங்கப்பட்டையில் இருக்கும் ‘கௌமாரின்’ என்னும் வேதிப் பொருள் இப்பணிக்கு உதவுகிறது. இந்த ‘கௌமாரின்’ ஈரலைப் பாதிக்கக்கூடியது என்பதால் அளவோடு பயன்படுத்த வேண்டும்.

காலில் ஏற்படும் புண்கள், நகம் மற்றும் கால் விரல்களின் இடுக்குகளில் ஏற்படும் பூஞ்சைக் காளான்கள் ஆகியவற்றை லவங்கப்பட்டைத் தைலம்

குணப்படுத்தக் கூடாது. லவங்கப்பட்டை கெட்ட கொழுப்புகள் ரத்தத்தில் சேராவண்ணம் பாதுகாப்பாக நிற்கிறது.

**லவங்கப்பட்டை மருந்தாகும் விதம்...**

ஒரு பங்கு லவங்கப்பட்டையோடு மூன்று பங்கு காசுக்கட்டி சேர்த்து எண்பது பங்கு நீரில் இட்டு கொதிக்க வைத்து வடிகட்டி இதனின்று 15 முதல் 20 கிராம் வரையில் தினம் மூன்று வேளை உள்ளுக்குக் கொடுத்துவர காலரா குணமாகும்.

லவங்கப்பட்டையோடு சோம்பு, சுக்கு, வாயுவிடங்கம், கிராம்பு ஆகியவை வகைக்கு நான்கு கிராம் என சேர்த்துக் குடிநீராகக் காய்ச்சி வடிகட்டி 20 முதல் 30 கிராம் வரையில் அன்றாடம் இரண்டு வேளை குடித்துவர வயிற்றுவலி, வயிற்றுப்பிடிப்பு, வயிற்றுப்புண், குன்னம், பூச்சிக்கடி முதலியன குணமாகும். லவங்கப்பட்டையின் சூரணத்தை 75 மி.கி. முதல் 250 மி.கி. வரையில் உள்ளுக்குக் கொடுப்பதால் ரத்த அழுத்தம், ரத்தத்தில் சேரும் கொழுப்பு ஆகியன குறையும். சீதபேதியின் போது லவங்கப்பட்டை சூரணத்தினை 750 மி.கி. அளவு நெய்யுடன் குழைத்து சாப்பிடுவதால் குணம் கிடைக்கும். லவங்கப்பட்டை, ஏலரிசி, சுக்கு இவற்றை சம அளவு எடுத்துப் பொடித்து வைத்துக் கொண்டு 250 மி.கி. முதல் 750 மி.கி. வரை உள்ளுக்கு உபயோகப்படுத்துவதால் வாந்தி, வயிற்றுப் பொருமல், வயிற்றுவலி, கழிச்சல், வயிற்றுக்கடுப்பு ஆகியன போகும்.

லவங்கப்பட்டையை பொடித்து நீரிலிட்டு கொதிக்க வைத்து போதிய சூட்டில் வாய் கொப்புளிக்க பல் வலி போகும். வாய் நாற்றம் விலகி பற்கள் ஆரோக்கியம் பெறும். உணவில் மணமும் சுவையும் சேர்ப்பதற்கென எண்ணி இருந்த நமக்கு அது இவ்வளவு மருத்துவ குணங்களைப் பெற்றுள்ளது என நினைக்கையில் வியப்பாகத்தானே உள்ளது!

**ஆரோக்கியப்பெட்டகம்: ஸுகினி**



பெயரில் பந்தா காட்டுகிற இந்தக் காய், நம்மூர் வெள்ளரிக்காய் வம்சாவளியைச் சேர்ந்தது. இன்னும் சொல்லப் போனால், இதற்கு சீமைச் சுரைக்காய் என இன்னொரு பெயரும் உண்டு. மத்திய மற்றும் தெற்கு அமெரிக்காவிலிருந்து அறிமுகமான இந்த ஸுகினி, ஏகப்பட்ட நோய்களுக்கு மருந்தாகிறது.என்னவென்றே தெரியாமல் வாங்கவும் சமைக்கவும் தயங்கிய மக்களுக்கு ஸுகினியின் அருமை பெருமைகளைச் சொல்வதுடன், அதை வைத்துச் செய்யக்கூடிய மூன்று சுவையான உணவுக்குறிப்புகளையும் கொடுக்கிறார் ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி பஜாஜ்.

**என்ன இருக்கிறது? (100 கிராம் அளவில்)**

| | | |
|---|---|---|
| கலோரி | 17 | கிலோ கலோரி |
| பொட்டாசியம் | 261 | மி.கி. |
| புரதம் | 1.2 | கிராம் |
| கார்போஹைட்ரேட் | 3.1 | கிராம் |

விதைத்த 6 முதல் 9 வாரங்களில் காய்க்கக்கூடியது ஸுகினி. பொதுவாக

இந்தக் காய் பச்சை நிறத்தில் காணப்பட்டாலும், மஞ்சள் மற்றும் இளம் பச்சை நிற ஸுகினிகளும் அவ்வப்போது விற்பனைக்கு வருவதுண்டு. 96 சதவிகிதம் நீர்ச்சத்து நிரம்பிய ஸுகினியில், கார்போஹைட்ரேட் மிகக்குறைவாகவும் ஆன்ட்டி ஆக்சிடென்ட்டுகள் அளவுக்கு அதிகமாகவும் உள்ளன. பீட்டா கரோட்டின், வைட்டமின் பி மற்றும் சி, கால்சியம், பொட்டாசியம் மற்றும் ஃபோலிக் அமிலமும் இதில் அதிகம். இதிலுள்ள பொட்டாசியம் இதயத்துக்கு இதமானது. ரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தக் கூடியது.

ஸுகினியின் தோல் பகுதியிலும் ஆன்ட்டி ஆக்சிடென்ட்டுகள் அதிகம் என்பதால் இதைத் தோலுடன் சமைப்பதே சிறந்தது. கொதிக்க வைப்பது, மைக்ரோவேவ் அவன் முறையில் சமைப்பதை எல்லாம் விட, ஆவியில் வைத்து சமைப்பதன் மூலம் இதன் சத்துகளை முழுமையாகப் பெறலாம்.100 கிராம் ஸுகினியில் இருப்பது வெறும் 17 கலோரிகள் மட்டுமே என்பதால் இதில் கொழுப்புச்சத்து என்ற பேச்சுக்கே இடமில்லை. இதன் தோலில் நார்ச்சத்து அதிகம் என்பதால் ஸுகினியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்பவர்களுக்கு மலச்சிக்கல் பிரச்னையும், பெருங்குடல் புற்றுநோய் அபாயமும் தவிர்க்கப்படுகிறது.

மஞ்சள் நிற ஸுகினியில் உள்ள கரோட்டின், lutein, Zea-Xanthin ஆகியவை முதுமையைத் தள்ளிப் போடவும், புற்றுநோய்க்கு எதிராகப் போராடவும் கூடிய தன்மைகள் கொண்டவை.எடைக் குறைப்பு முயற்சியில் இருப்பவர்களுக்கான டயட்டில் ஸுகினிக்கு முக்கிய இடமுண்டு.ஸுகினியில் அதிகமான அளவில் உள்ள ஃபோலேட் (Folate) கர்ப்பிணிகளுக்கு மிக அவசியமானது. இதை அடிக்கடி எடுத்துக் கொள்வதன் மூலம் பிறக்கும் குழந்தைகளுக்கு நரம்பியல் தொடர்பான சிக்கல்கள் வராமல் தவிர்க்கலாம்.

இதிலுள்ள வைட்டமின் ஏ மற்றும் சி சத்துகள் சரும ஆரோக்கியம் மற்றும் பொலிவைக் கூட்டவும், நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கவும் கூடியவை. இவை தவிர, ஸுகினியில் மிக முக்கியமான பி காம்ப்ளக்ஸ் குழும வைட்டமின்களான தயமின், பிரிடாக்சின், ரிபோஃப்ளோவின் ஆகியவையும், இரும்புச்சத்து, மாங்கனீசு, பாஸ்பரஸ் மற்றும் துத்தநாகமும் இருந்து உடலைக் காக்க உதவுகின்றன.

ஆண்களுக்கு பிராஸ்டேட் சுரப்பி விரிவடைந்து, அதன் விளைவாக சிறுநீர் கழிப்பதிலும், அந்தரங்க உறவில் பிரச்னைகள் ஏற்படவும் காரணமாகிற Benign Prostatic Hypertrophy பிரச்னையைக் குணப்படுத்துகிற தன்மையும் ஸுகினியில் இருப்பதாக ஆய்வுகள் நிரூபித்துள்ளன. வைட்டமின் சி அதிகமுள்ள காரணத்தினால் ஆஸ்துமா மற்றும் அலர்ஜி பிரச்னை உள்ளவர்களுக்கும் இது மருந்தாகிறது. ஆட்டோஇம்யூன் குறைபாடுகள் ஏற்பட்டு, உடலின் உள் உறுப்புகள் பாதிக்கப்படுவதையும் தடுக்கிறது.

**எப்படித் தேர்ந்தெடுப்பது?**

அளவில் பெரியதை வாங்க வேண்டாம். சிறியதாகவும், தொட்டுப் பார்த்தால் தோல் அழுத்தமாக, அடர் பச்சையில் இருக்கும்படியும் உள்ளதே நல்ல காய். 6 முதல் 8 இன்ச் நீளமுள்ள காய்கள் சுவையாக இருக்கும். இதன் நுனிகள் சுருங்கியிருந்தால் பழைய காய் என அர்த்தம். அந்தக் காய்களில் நீர்ச்சத்து முழுமையாக இருக்காது.

**எப்படி பத்திரப்படுத்துவது?**

ஸுகினியை கழுவி விட்டு ஃப்ரிட்ஜில் வைக்க வேண்டாம். ஒரு பிளாஸ்டிக் கவரில் ஆங்காங்கே துளைகள் போட்டு, அதனுள் காய்களை போட்டு ஃப்ரிட்ஜில் அதிகக் குளிர்ச்சி உள்ள பகுதியில் வைக்கவும். இது நீர்ச்சத்துள்ள காய் என்பதால் நான்கைந்து நாட்களுக்குள் உபயோகித்து விடுவதே சிறந்தது. ஊட்டச்சத்து நிபுணர் மீனாட்சி பஜாஜ் சொன்ன முறைப்படி 3 ருசியான ஸுகினி ரெசிபிகளை இங்கே செய்து காட்டியிருக்கிறார் சமையல் கலைஞர் சுதா செல்வக்குமார்.

**ஸுகினி கேரட் கிளியர் சூப் - என்னென்ன தேவை?**

துண்டுகளாக நறுக்கிய ஸுகினி - கால் கப், துண்டுகளாக நறுக்கிய தக்காளி - கால் கப், பொடியாக நறுக்கிய வெங்காயம் - 2 டேபிள்ஸ்பூன், தோல் நீக்கி நறுக்கிய கேரட் - கால் கப், பொடியாக நறுக்கிய பூண்டு - 1 டீஸ்பூன், ஸ்வீட் கார்ன் - கால் கப், காய்கறி வேக வைத்த தண்ணீர் - 4 கப், பொடியாக நறுக்கிய கொத்தமல்லித் தழை - 2 டேபிள்ஸ்பூன், எண்ணெய் - 2 டேபிள்ஸ்பூன், உப்பு - தேவைக்கேற்ப, ஃப்ரெஷ்ஷாக பொடித்த வெள்ளை மிளகு - அரை டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

கடாயில் எண்ணெய் விட்டு, பூண்டு, வெங்காயம் சேர்த்துப் பொன்னிறமாகும்வரை வதக்கவும். அதில் உப்பு, மிளகுத் தூள், தக்காளித் துண்டுகள் சேர்த்து மேலும் 2 நிமிடங்களுக்கு வதக்கவும். காய்கறி வேக வைத்த தண்ணீர் சேர்த்துக் கொதிக்க வைக்கவும். தீயைக் குறைத்து வைத்து நறுக்கிய ஸுகினி, கேரட், ஸ்வீட் கார்ன், கொத்தமல்லி சேர்க்கவும். பாத்திரத்தை மூடி வைத்து 20 நிமிடங்களுக்குக் குறைந்த தணலில் கொதிக்க விடவும். காய்கறிகள் நன்கு வெந்ததும், மேலும் சிறிது கொத்தமல்லித் தழை தூவி சூடாகப் பரிமாறவும்.

**ஸுகினி டிக்கி என்னென்ன தேவை?** துருவிய மஞ்சள் மற்றும் பச்சை நிற ஸுகினி - தலா 1, வேக வைத்து, தோல் உரித்து, மசித்த உருளைக்கிழங்கு - பாதி, எண்ணெய் - அரை டேபிள் ஸ்பூன், பொடியாக நறுக்கிய பூண்டு - 4 பல், உப்பு சிறது, மிளகாய் தூள் - 1 டீஸ்பூன், சீரகத் தூள் - கால் டீஸ்பூன், சாட் மசாலா - கால் டீஸ்பூன், கரம் மசாலா தூள் - அரை டீஸ்பூன், பிரெட் தூள் - கால் கப், பொடியாக நறுக்கிய கொத்தமல்லித் தழை - அரை டேபிள்ஸ்பூன். **எப்படிச் செய்வது? -** கடாயில் எண்ணெயை சூடாக்கி, பூண்டு சேர்த்து 15 நொடிகளுக்கு வதக்கவும். பிறகு இரண்டு நிற ஸுகினி துருவலையும் சேர்த்து 2 நிமிடங்களுக்கு வதக்கவும். உப்பு சேர்த்து பெரிய தீயில் வைத்து காய்கள் நன்கு வதங்கச் செய்யவும். ஒரு பாத்திரத்தில் மசித்த உருளைக்கிழங்கை எடுத்துக் கொண்டு, அதில் வதக்கிய ஸுகினி, பூண்டுக் கலவையைச் சேர்க்கவும். அதில் மிளகாய் தூள், சீரகத்தூள், கரம் மசாலா தூள், சாட் மசாலா தூள் (சிறிது சாட் மசாலாவை தனியே வைத்துக் கொள்ளவும்), கொத்தமல்லித் தழை, பாதி அளவு பிரெட் தூள் எல்லாம் சேர்த்துப் பிசையவும். கலவையை ஒரே அளவிலான உருண்டைகளாக எடுத்து கட்லெட் போலத் தட்டவும். பிறகு அவற்றை மீதி பிரெட் தூளில் புரட்டவும். நான் ஸ்டிக் தோசைக் கல்லை சூடாக்கி, தயாராக உள்ள டிக்கிகளை அடுக்கி, லேசாக எண்ணெய் விட்டு, இரண்டு பக்கங்களும் கரகரப்பாகும்வரை வைத்திருந்து எடுக்கவும். தனியே எடுத்து வைத்துள்ள சாட் மசாலாவை தூவி, இனிப்பு மற்றும் கார சாஸ் உடன் பரிமாறவும். **ஸுகினி கிச்சடி**

**என்னென்ன தேவை?**

கம்பு - கால் கப், பொடியாக நறுக்கிய சிவப்பு, பச்சை மற்றும் மஞ்சள் குடை மிளகாய் - தலா 2 டேபிள்ஸ்பூன், தோல் நீக்காமல் பொடியாக நறுக்கிய ஸுகினி - 2 டேபிள்ஸ்பூன், உப்பு- தேவைக்கேற்ப, சீரகம் - கால் டீஸ்பூன், பெருங்காயம் - 1 சிட்டிகை, பால் - கால் கப், பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் - 1 டீஸ்பூன், பொடியாக நறுக்கிய புதினா மற்றும் கொத்தமல்லித் தழை - 2 டேபிள்ஸ்பூன், எலுமிச்சைச் சாறு - சில துளிகள், எண்ணெய் - ஒன்றரை டீஸ்பூன்.

**எப்படிச் செய்வது?**

கம்பை சுத்தப்படுத்தி, போதுமான அளவு தண்ணீர்விட்டு, முதல் நாள் இரவே ஊற வைக்கவும். மறுநாள் அந்தத் தண்ணீரை வடித்துவிட்டு, புதிதாக அரை கப் தண்ணீர் சேர்த்து பிரஷர் குக்கரில் 5 விசில் வைக்கவும். வெந்த கம்பை தண்ணீரை வடிக்காமல் அப்படியே வைக்கவும். அகலமான நான்ஸ்டிக் பாத்திரத்தில் எண்ணெய் விட்டு, சீரகம், பெருங்காயம் தாளிக்கவும்.

மூன்று நிற குடை மிளகாய் மற்றும் ஸுகினி துண்டுகளை ஒன்றன் பின் ஒன்றாகச் சேர்த்து 2 நிமிடங்களுக்கு வதக்கவும். உப்பு, எலுமிச்சைச்சாறு சேர்க்கவும். வேக வைத்த கம்பை, அந்தத் தண்ணீருடனேயே சேர்த்துக் கிளறவும். கொஞ்சம் கொஞ்சமாக பால் சேர்த்துக் கிளறவும். புதினா, பச்சை மிளகாய் மற்றும் கொத்தமல்லித் தழை சேர்த்து மிதமான தீயில் கிளறிக் கொடுக்கவும். புதினா சட்னியுடன் சூடாகப் பரிமாறவும்.

தி இந்து
தமிழால் இணைவோம்

**தீபாவளி வியாபாரம் முடிந்ததால்_: விற்பனைக்காக வெளிமாநிலம் செல்லும் சோழவந்தான் தேங்காய்கள்_**



ஆந்திர தேங்காய்கள் மூலம் தீபாவளி வியாபாரம் முடிந்ததால் சோழவந்தான் பகுதியில் உற்பத்தி யாகும் தேங்காய்களுக்கு தமிழக சந்தைகளில் வரவேற்பு இல்லை அதனால் விற்பனைக்காக வட மாநிலங்களுக்கு அனுப்பி வைக் கப்படுகின்றன.

மதுரை மாவட்டத்தில் சோழவந் தான், கொட்டாம்பட்டி, அலங்கா நல்லூர், வாடிப்பட்டி, திருப்பரங் குன்றம், மேலூர் ஆகிய பகுதிகளில் 10,475 ஏக்கரில் தென்னை விவசாயம் நடைபெறுகிறது. இவற்றில் சோழ வந்தான், கொட்டாம்பட்டி, அலங் காநல்லூர் வைகை ஆற்றுப் பாசனப் பகுதிகளில் விவசாயிகள் அதிக அளவு தென்னை சாகுபடி செய்துள்ளனர். இங்கு உற்பத்தியாகும் தேங் காய், தமிழகத்தின் பிற மாவட் டங்கள், மகாராஷ்டிரா, ராஜஸ்தான், டெல்லி, கொல்கத்தா, மும்பை

சந்தைகளுக்கு ஆண்டு முழுவதும் விற்பனைக்கு செல்கின்றன. தற்போது தீபாவளிப் பண்டிகை வியாபாரத்தையொட்டி நல்ல விலை கிடைக்கும் என இப்பகுதி விவசாயிகள், வியாபாரிகள் எதிர்பார்த்திருந்தனர். ஆனால், தமிழக சந்தைகளில் வரவேற்பு இல்லாததால் சோழவந்தான், கொட்டாம்பட்டி தேங்காய்கள் வெளிமாநிலங்களுக்கு அடிமாட்டு விலைக்கு அனுப்பப்படுகிறது.

இதுகுறித்து சோழவந்தானைச் சேர்ந்த தேங்காய் வியாபாரி சந்திரசேகர் கூறியதாவது:

வெளிமாநில கோயில்களில் பூஜைக்கு தமிழகத்தில் இருந்து அதிக அளவு தேங்காய்கள் விற்ப னைக்கு செல்கின்றன. ஆந்திரா வில் இருந்து தேங்காய் வராமல் இருந்தால் தமிழக தேங்காய்க ளுக்கு சந்தைகளில் நல்ல வர வேற்பு கிடைக்கும்.

ஒரு நாளுக்கு 300 லாரிகளில் கூட வெளிமாநிலங்களுக்கு தேங்காய் ஏற்றுமதியாகும். தற்போது ஆந்திர தேங்காய் விற்பனைக்காக அதிக அளவு தமிழகத்திற்கு வந்துள்ளது. தீபாவளிப் பண்டிகையில் தேங்காயின் பயன்பாடு முக்கிய மானதாக இருக்கும். ஆந்திர தேங்காய்கள் மூலம் தீபாவளி தேங்காய் வியாபாரம் இந்த ஆண்டு இரு வாரத்திற்கு முன்பே முடிந்துவிட்டது.

அதனால், தற்போது தமிழக தேங்காய்களுக்கு சந்தைகளில் வரவேற்பு இல்லை. சோழவந்தா னில் இருந்து ஒரு தேங்காய் 7 ரூபாய் 40 பைசாவுக்கு மட் டுமே மகாராஷ்டிராவுக்கு ஏற்றுமதி யாகிறது. உள்ளூர் சந்தைகளிலும் விலை குறையத் தொடங்கியுள்ளது.

தேங்காய் விலை குறைந்தால் மிகப்பெரிய நஷ்டம் ஏற்படும். இரு ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வறட்சி, விலை வீழ்ச்சியால் தமிழகத்தில் தென்னை மரங்களை விவசாயிகள் வெட்டினர். கடந்த ஒரு ஆண்டாக நல்ல விலை கிடைத்ததால் விவசாயிகள் தென்னை மரங்களை காப்பாற்றி னர். தற்போது ஆந்திர தேங்காய் வருகையால் மீண்டும் தேங்காய் விலை இறங்கு முகமாக இருப்பது கவலையளிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.____

**பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து: உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை**



பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதால் புற்றுநோய் ஏற்படும் ஆபத்து உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதேநேரம் இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு அதிக தண்ணீர் செலவிடப்படுவதால் எதிர்காலத்தில் இந்தியாவில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவின் தேசிய சுகாதார நிறுவனத்தின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், சிவப்பு இறைச்சி, பதப்படுத்தப்பட்ட இறைச்சியை உண்பதால் இதய நோய், புற்றுநோய் ஏற்படும் வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இதை இப்போது உறுதி செய்துள்ள உலக சுகாதார நிறுவனம், சிவப்பு இறைச்சியை உண்பதால் குடல் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிக அதிகமாக உள்ளது என்று எச்சரித்துள்ளது.

பிரிட்டனைச் சேர்ந்த புற்றுநோயாளிகளில் 19 சதவீதம் பேர் புகையிலைப் பழக்கத்தாலும் 3 சதவீதம் பேர் இறைச்சி சாப்பிடுவதாலும்

இந்நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக ஆய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தியாவில் இறைச்சி உண்ணும் பழக்கம் அண்மைகாலமாக அதிகரித்து வருகிறது. ஆனால் வெளிநாடுகளை ஒப்பிடும்போது இது மிகவும் குறைவு. சீனாவில் ஒருவர் ஆண்டுக்கு 10 கிலோ கோழி இறைச்சி சாப்பிடுகிறார். இது இந்தியாவைவிட 10 மடங்கு அதிகம். இதேபோல மாட்டிறைச்சி உண்பதிலும் சீனா மற்றும் மேற்கத்திய நாடுகளைவிட இந்தியா மிகவும் பின்தங்கியே உள்ளது.

இந்தியாவில் பதப்படுத்தப்பட்ட இறைச்சியை சாப்பிடுவதும் மிகவும் குறைவாகும். பெரும்பாலும் கோழி இறைச்சிதான் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

**தண்ணீர் தட்டுப்பாடு**

இந்தியாவைப் பொறுத்தவரை இறைச்சி சாப்பிடுவதால் ஏற்படும் பாதிப்புகளைவிட இறைச்சி ஏற்றுமதியால் அதிக பாதிப்புகள் ஏற்படுகிறது.

உலகளாவிய அளவில் இறைச்சி ஏற்றுமதிமதியில் இந்தியா முன்னணியில் உள்ளது. பொதுவாக இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதி செய்வதற்கு அதிக தண்ணீர் செலவிடப்படுகிறது.

ஒரு கிலோ இறைச்சியை பதப்படுத்தி ஏற்றுமதிக்கு தயார் செய்ய சுமார் 16 ஆயிரம் லிட்டர் தண்ணீர் தேவைப்படுகிறது. அதேநேரம் ஒரு கிலோ காய்கறிகளை பதப்படுத்தி தயார் செய்ய 320 லிட்டர் தண்ணீர் இருந்தால் போதுமானது.

இந்தியாவில் பெரும்பாலான பகுதிகளில் தனிநபருக்கான தண்ணீர் தேவையைக் கூட பூர்த்தி செய்ய முடியாத நிலை உள்ளது. ஆண்டுதோறும் வயிற்றுப்போக்கு உள்ளிட்ட காரணங்களால் நூற்றுக்கணக்கான குழந்தைகள் மடிகின்றன.

இந்நிலையில் இறைச்சி பதப்படுத்துதலுக்காக அதிக தண்ணீரை செலவிட்டால் எதிர்காலத்தில் தண்ணீர் தட்டுப்பாடு அதிகரிக்கும் அபாயம் உள்ளது.சுற்றுச்சூழல் பாதிப்புஇதுதவிர இறைச்சி

பதப்படுத்துதலால் சுற்றுச்சூழலும் அதிகம் பாதிக்கப்படுகிறது. உலகளாவிய அளவில் கால்நடைகளால் 18 சதவீதம் பசுமைக்குடில் வாயு வெளியாகிறது.

மாட்டிறைச்சி உற்பத்திக்கு இதர கால்நடைகளை விட 28 மடங்கு கூடுதலாக நிலம் தேவைப்படுகிறது. இதனால் பெரும்பாலான நாடுகளில் மாட்டிறைச்சிக்கு பதிலாக காய்கறி உற்பத்திக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

இந்திய மாட்டுப் பண்ணைகளில் இப்போது அதிக அளவில் ஆன்டிபயாடிக் பயன்படுத்தப்படுகிறது. இதன்காரணமாக மருந்துகளுக்கு கட்டுப்படாத பாக்டீரியாவின் பாதிப்பு அண்மைக்காலமாக அதிகரித்து வருகிறது. இத்தகைய பாக்டீரியாவால் இந்தியாவில் ஆண்டுதோறும் 58 ஆயிரம் பச்சிளம் குழந்தைகள் உயிரிழக்கின்றனர்.

இது ஓர் அபாய எச்சரிக்கை ஆகும்.